காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

13-2-66

பென் பெர்க்கா

காமராசர்-சில கேள்வி, பதில்!

["பிளிட்ஸ்" என்ற ஏட்டின் நிருபர் அண்மையில் காமராசரைப் பேட்டி கண்டு சில சுவையான தகவல்களைத் தந்திருக்கிறார். அதுதான் இது.]

கேள்வி:- புவனேஸ்வர் மாநாட்டுத் தீர்மானப்படி காங்கிரஸ், சோஷலிச சமதர்மக் கொள்கையில் முன்னேற்றம் கண்டுள்ளதா?

பதில்:- எதிர்பார்த்த அளவு இல்லை; காரணம் இந்த நாட்டில் கடந்த இரண்டாண்டுக் காலத்தில் நிகழ்ந்துவிட்ட எதிர்பாராத (அதாவது நேருவின் மறைவு) நிகழ்ச்சிகள்தான்!

(நேருவின் மறைவு, இந்தியா சோஷலிச இலட்சியத்தை அடையும் வழியை அடைத்துவிட்டது: அல்லது நேருவுக்குப் பிந்தியவர் இந்த இலட்சியத்தை அடைய ஒத்துழைப்புத் தரவில்லை—காமராஜர் கருத்துப்படி).

O

கேள்வி:- நில உச்ச வரம்பு பற்றி அடிக்கடி பேசும் நீங்கள் பஞ்சாபில் பிர்லாவுக்கு ஆயிரககணக்கான ஏகர் நிலம் சாகுபடிக்குத் தர சம்மதிக்கலாமா?

பதில்:- 'ஜாயிண்ட் ஸ்டாக்' கம்பெனிகளை விவசாயம் செய்ய அனுமதிப்பது அபாயகரமானதாகும்; உச்ச வரம்புக் கொள்கையின் அடிப்படையையே இது தகர்த்துவிடும்; பிர்லா பண்ணை பற்றி—அது முடிவடைந்து விட்டதா எனபதுபற்றி எனக்குத் தெரியாது.

(மக்கள் சபையிலே இந்தவிவகாரம் பேசப்பட்டது; அப்படி இருந்தும் காங்கிரஸ் தலைவருக்கு இது தெரியாதாம்! அப்படியானால் அரசுக்காரியங்கள் அனைத்தும் காமராசருக்குத் தெரியாமல்தான் நடக்கின்றன; அல்லது காமராசரது யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில்லை; இல்லையென்றால், காமராசர் தனக்குத் தெரியாது என்பதன் மூலம் பிரச்னையை மூடி மறைத்து மக்களை ஏமாற்றுகிறார்.)

O

கேள்வி:- நகரங்களில் உள்ள சொத்துக்களுக்கு உச்ச வரம்பு பற்றி காங்கிரஸ் தனது கடந்த தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது—நீங்களும் இதுபற்றிப் பல இடங்களில் பேசியிருக்கிறீர்கள். ஆனால், பார்லிமெண்டில் ஒரு உறுப்பினரின் இந்தத் தீர்மானத்தைப் பல காங்கிரஸ்காரர்களே எதிர்த்தார்களே—தெரியுமா?

பதில்:- உண்மையே! உச்ச வரம்புக் கொள்கை எனக்கும் உடன்பாடுதான்; ஆனால் இவைகளை நிறைவேற்ற வேண்டியது சர்க்கார்தான்; தனி நபர் அல்ல!

(காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டது இது மட்டுமா? ஏ அப்பா! அனைத்தையும் அரசாங்கம்தான் நிறைவேற்ற வேண்டும்! காமராசரா நிறைவேற்றுவார்? பிர்லா விவகாரமே தெரியாத இவருக்கு இதெல்லாம் எந்த மூலைக்கு...காமராசரைத்தான் அரசாங்கம் எதற்கும் கலந்து கொள்வதில்லையே! இவரது பேச்சை வைத்து, அது அரசாங்கத்தின் கொள்கை என்று யாரை நம்பச் சொன்னார்கள்? தங்கள் 'பகல்கொள்ளை'ப் பாதிக்கப்படும் என்கிற விவகாரத்தில் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அமைச்சர்களே வரிந்து கட்டிக்கொண்டு வருவதை மக்கள் மறந்துபோனார்களா என்ன?)

O

கேள்வி:- காங்கிரஸ் கட்சியை ஏழையர் ஸ்தாபனமாகவும், புரட்சிகர முடையதாக மாற்ற வேண்டுமென்றும், பேசிவருகிறீர்களே — நடைமுறையில் இது நேர்மாறானதாக இல்லையா?

பதில்:- உண்மையில் நாம் முன்னேற்றமடையவில்லை. தேக்க நிலையில்தான் இருக்கிறோம்!

(அதாவது காங்கிரஸ் ஏழையர்——மக்கள்—கட்சியாக இல்லை; முதலாளிகளின் கட்சியாக இருக்கிறது. புரட்சிகரமான மாறுதலுக்கு அது தன்னைத் தயாராக்கிக்கொள்ளவில்லை—மக்களை முன்னேற்ற நிலைக்கு அழைத்துச் சென்று வாழ வகை செய்யவில்லை—அதனால் முன்னேற்றமடையவில்லை மக்கள்! ஆகவே நாட்டின் எந்தத் துறையும் தேக்க நிலையில்தான் இருக்கிறது — உண்மைதானே!)

நம்பத்தான் வேண்டும்!

முதலில் படத்தை உற்றுப் பாருங்கள்! பார்த்துவிட்டீர்களா? என்ன புரிகிறது?

இது என்ன வானொலி அஞ்சல் நிலையமா? இரயில்வே ஸ்டேஷனிலுள்ள நவீனகைகாட்டி இயக்கும் கருவியா?

உங்கள் கண்டுபிடிப்பு அநேகமாக சரியில்லை. ஏன் தெரியுமா?

இது ஒரு மாடிவீடு. 13 மாடிகளைக் கொண்டது. இப்போதுதான் முதல் மாடி கட்டி இருக்கிறார்கள்

என்ன ஆச்சரியப்படுகிறீர்கள்? உண்மையிலேயே இது வியப்புக்குரியதுதான்!

உங்கள் ஊரில் கீழிருந்துதானே அஸ்திவாரமிட்டு வீடுகளைக் கட்டுவார்கள்! ஆனால், இந்த வீடு 'உச்சி'யிலிருந்து தலைகீழாகக் கட்டப்படுகிறது. என்ன நம்ப முடியவில்லையா?

உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. அடுத்த ஆண்டுக்குள் இந்த 13 மாடிகளும் கட்டி முடிக்கப்படும்.

இதேபோல் இன்னும் பல நகர்களிலும் இத்தகைய 'தலைகீழ்' வீடுகள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தற்போது மே. ஜெர்மனியில் உள்ள ஹாம்பர்க் நகரில் உருவாகிறது இது.

இப்போது நம்புகிறீர்களா?

காஞ்சி

மலர் 2 13—2—66 இதழ் 29

எழுச்சிக்கான அழைப்பு

நாலை மணி நேரப் பயணம்—நாளைக்கு மூன்று வண்டிகள் உண்டு—ரயிலை விட்டு இறங்கியதும், வாடகை மோடார் கிடைக்கும்—பதினைந்தே நிமிடம்—அகலமான அழகான நெடுஞ்சாலை—தோட்ட வீடு—அதுதான் மிட்டாதாரர் கங்காதரத்தின் மாளிகை—அங்கு...!

மாலை ஆறு மணிக்குப் புறப்படும் இரயிலில் ஏறினால் காலை 8 மணிக்குப் போய்ச் சேரலாம்—இரவு முழுவதும் பயணம்—வண்டியில் இடநெருக்கடி. காலையிலே இரயிலை விட்டு இறங்கியதும், வண்டி தேடவேண்டும், இரட்டை மாட்டு வண்டி; அதிலே ஏறிக்கொண்டு எட்டுக் கல் தொலைவு போகவேண்டும்; வழி நெடுகப் பனந்தோப்பு, அடர்ந்த புதர்கள், மேடு பள்ளம்; வழிப் பறிக்காரர்கள்கூட உலவும் இடம் என்பார்கள்; வழியில் ஒரு கடை கன்னி கிடையாது; எட்டு மைல் சென்றதும் இறங்கிவிட வேண்டும், அதற்குமேல் வண்டி போகமுடியாது; உளைகள் நிரம்பிய இடம்; ஒற்றையடிப் பாதையில் நடந்து செல்லவேண்டும்; கட்டுவிரியன் அதிகம்; அதைக் கடந்துபோனால், கிராமம்; அங்கு உள்ள சாவடிக்குப் பின்புறம் பழைய ஓட்டுப் பில்லை வீடு—அதிலே......

வழி, இயல்பு, பயண முறை கூறிவிட்டோம்.

இந்த இரு இடங்களிலே எங்கு செல்ல விருப்பம் வரும்? என்பது எதைப் பெற விரும்புகிறோம் என்பதைப் பொறுத்தது, அல்லவா.

உடலுக்கு அலுப்பு இல்லாமல் செல்லலாம்; மிட்டாதாரர் வீட்டுக்குப் போக எண்ணினால்.

இரவெல்லாம் இரயிலில் அடைபட்டு, காலையிலே இரட்டை மாட்டு வண்டியில் பயணம் செய்து, ஒற்றையடிப் பாதையிலே நடந்து, பிறகு காணலாம் சாவடிக்குப் பின்புறம் உள்ள பழைய வீட்டை.

மாளிகையா, வீடா? மிட்டாதாரனின் தோட்ட வீடா, சாவடிக்குப் பின்புறமுள்ள குடிலா? எது வேண்டும், எங்கே செல்ல விருப்பம் என்று கேட்டால், திருப்பிக் கேட்பார்களல்லவா, மாளிகையில் என்ன கிடைக்கும், சாவடி வீட்டில் என்ன கிடைக்கும் அதைச் சொல்லு முதலில் என்று.

வாழ்ந்தால் காலமெல்லாம் இவளுடன் வாழ்வேன்; இல்லையெனில் ஒண்டிக்கட்டையாகவே கடைசிவரையில் இருந்துவிடுவேன். என் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன்; வேறோர் பெண்ணுக்கு என் சமுதாயத்தில் இடமில்லை — என்றெல்லாம் சொல்லத் தோன்றுகிறது. அவ்வளவு எழில் உள்ள மங்கை! அந்தப் பெண் இருக்கும் இடம், இரவெல்லாம் ரயில் பயணம், பகலிலே பாதிநேரம் இரட்டை மாட்டு வண்டிப் பயணம், பிறகு ஒற்றையடிப் பாதையிலே நடை; கடைசியில் சாவடிக்குப் பின்புறம் உள்ள வீடு என்பது நிலை என்றால், சேச்சே! பயணம் தொல்லை மிக்கது, வழி கடினமானது, வீடு பழங்காலத்தது என்று கூறி, இத்துணை இடர்ப்பட்டுக்கொண்டு அந்த இதயம் வென்றானைக் காண்பதனைவிட, அலுப்பு ஏற்படாத ரயில் பயணம், அதற்குப் பிறகு மோடார் சவாரி, பிறகு மிட்டாதாரர் வீடு, அங்கு சென்று, கருப்போ சிகப்போ, கவர்ச்சியோ அல்லவோ, புன்னகை பூத்த முகத்தினளோ பொன்னகைக்குச் சுமை தாங்கியோ, ஏதோ ஒன்று அதனை என்னவளாக்கிக் கொள்வேன், என்று கூறுவர்? கூறத் தோன்றுமா? மூச்சை அடக்கி மூழ்கியன்றோ முத்து எடுத்திட முடியும், சேற்றிலுள்ள வளையிலே கைவிட்டா எடுத்திட முடியும்! வெட்டி வெட்டி ஆழங் கண்டல்லவா பொன் பெறமுடியும், கொட்டி வைத்துள்ள குப்பையைக் கிளறியா பொன் பெற்றிட முடியும்! அதுபோல, என் இதயம் வென்றானை நான் பெற்றிட, பாதைக் கஷ்டம் பயணக் கஷ்டம் பார்த்திடப் போமோ! அவளைப் பெற்றிட ஆறு பல நீந்தியாக வேண்டுமெனினும் அடவி பல தாண்டியாக வேண்டுமெனினும், குன்றுகளைக் கடந்தாக வேண்டுமென்றாலும் தயங்குவேனா! எனக்கு வேண்டுவது இதயம் நிறைந்த அந்த எழில் மங்கை! அவளைக் காணச் செல்லும் வழியில் பனந்தோப்பு இருக்குமா—இருக்கட்டுமே! அவ்வளவும் என் கண்களுக்குப் பவழமல்லிகையாகவன்றோ தோன்றும். ஒற்றையடிப் பாதையா, கல்லும் முள்ளுமா! இருக்கட்டுமே! பட்டுமெத்தை விரித்து வைத்திருப்பது போலல்லவா எனக்குத் தோன்றும். சாவடியின் பின்புறமா! இருந்தாலென்ன! என் கண்களுக்கு, காதல் விருந்தளிக்கவல்ல கலைக்கூடமாகவன்றோ அந்த இடம் தோற்றமளிக்கும். கன்னல் மொழி தந்திட கட்டழகி உள்ள இடம் அது என்றால், இன்னல் எத்தனை என்றாலும் பொருட்படுத்துவேனா!!—என்றெல்லாம் கூறுவர்.

மாளிகையிலுள்ள மங்கைக்கு அவள் தந்தை மாநிதி தருகிறான் என்றால், வாய் பிளந்தா நிற்பர்!! யாருக்கு வேண்டும் அந்தச் செல்வம்—வற்றாத செல்வம், என் இன்பவல்லி! என்று காதலின் மாண்பினை உணர்ந்தவர் அனைவருமே கூறுவர்.

(18-ம் பக்கம் பார்க்க)

குலசேகரனைக் கண்ட காஞ்சனை யின் கண்கள் மிரண்டன.

"சொன்னதெல்லாம் உண்மையா என்று கேளடி, சிலம்பு!' என்று தனது தோழியைப் பார்த்து கூறினாள்.

'ஆமாம் உண்மைதான்! அரசரின் உத்தரவு தெரியாததினால்தான் இந்தத் தடாகத்திற்கு நீர் அருந்த நான் வந்தேன். அரசரின் கட்டளை தெரிந்த பிறகும், நான் முன்வைத்த காலைப் பின்வைக்க முடியாதபடி, உம் தோழியரின் ஆணவமான பேச்சு, எனக்கு ஆத்திரம் மூட்டி விட்டது!...விஷம் என்று தெரிந்து குடித்தாலும், தெரியாமல் குடித்தாலும் அது நிச்சயம் உயிரைப் போக்கிவிடும்! அதுபோல வேந்தரின் உத்தரவு தெரிந்திருந்தாலும், தெரியாமல் இருந்தாலும் நான் இங்கு வந்தது தவறுதான்! தவறு செய்துவிட்ட நான், யாரிடமும் மன்னிப்புக் கேட்கத் தயாராக இல்லை! தவறு செய்துவிட்டு, தப்பியோட முயற்சி செய்வதைவிட அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்வதே வீரம் என்று எண்ணுபவன் நான்!'

'இனி இப்பக்கம் வருவதில்லை என்று உறுதி தந்தால் நான் மன்னித்து விடுவதாகச் சொல், சிலம்பு!'

'தவறு செய்துவிட்ட நான், யாரிடமும் மன்னிப்புக் கேட்கத் தயாராக இல்லை என்று முன்னமே சொல்லிவிட்டேனே!'

'உன்னை நான் மன்னிக்கிறேன்!'

'வேண்டாம்! இப்பொழுது சொல்லப்போவதை எண்ணி, இளவரசியாரே, நானே வருத்தமடைகிறேன்! ஆனாலும் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறேன்! சேலை கட்டிய மங்கையின் மன்னிப்பைவிட, செங்கோல் ஏந்திய மன்னனின் தண்டனையே பெருமைக்குரியது என்று கருதுபவன் நான்!'

'ஆணவம் அதிகமாகத்தான் இருக்கிறது, அரச மன்றத்திற்கு இவனை இழுத்துச் செல்லுங்கள்!' என்று கோபத்தோடு சொல்லிவிட்டு, காஞ்சனமாலை பல்லக்கில் ஏறி உட்கார்ந்தாள்.

'இளவரசியாரே, நான் செய்த தவற்றை ஒத்துக்கொண்டேன்! அதற்கான தண்டனையை ஏற்றுக் கொள்ள சித்தமாகிவிட்டேன்! ஆனால் ஒன்று...'

'என்னவென்று சொல்லச் சொல்லடி, சிலம்பு!'

கே.ஜி. இராதாமணாளன்

'இளவரசியாரைப் பார்க்கும் போதே தெரிகிறது. இரக்கமான உள்ளம் கொண்டவர் என்று! ஆகவே துணிந்து ஒரு உதவியைக் கேட்கிறேன்! இந்த நாணற் புதருக்கு அப்பக்கத்தில், என் நண்பன் எனக்காகக் காத்திருக்கிறான்! அவனை ஒருமுறை பார்க்க அனுமதிக்கவேண்டும்! அவனிடம் செய்தியைத் தெரிவித்துவிட்டு, நான் எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்!"

"சரி!" என்று இளவரசி கூறியதும், கட்டோடு அவனைத் தோழிகள் அப்பக்கமாக இழுத்துச் சென்றனர்.

இளவரசனைப் பெண்கள் கொடியினால் கட்டிப்பிடித்து இழுத்து வருவதைக் கண்ட நன்னனுக்கு ஒன்றுமே புரியவில்லை!

"தாகமாக இருக்கிறது என்று சென்றவர், ஏதாவது தவறு செய்து விட்டாரோ? இவரோ சிரித்த முகத்தோடு, தலைநிமிர்ந்து நடந்து வருகிறார்! ஆனால் அவரைச் சுற்றியுள்ள பெண்களோ, கையில் வேலோடும் முகத்தில் ஆத்திரத்தோடும் இருக்கிறார்களே?"

இவ்வாறு எண்ணிய நன்னன் இளவரசனை நோக்கி வேகமாக நடந்தான்.

"பார்த்தாயா நன்னு, உன் நண்பன் பூஞ்சோலைக்குக் கிடைத்திருக்கும் பரிசை!" என்று குலசேகரன் கண் சிமிழ்த்து கூறியதின் உட்கருத்தை, நன்னன் உடனே புரிந்து கொண்டான்.

"பூஞ்சோலை, இதெல்லாம் என்னப்பா, எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!"

"கொடியினால் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பவர்கள் பெண்கள் — அது புரிகிறது அல்லவா?"

"அட அட! இவர்களெல்லாம் பெண்களா? வேடிக்கைக்காக வேட்டிக்குப் பதில், சேலை உடுத்திய ஆண்கள் என்றல்லவா எண்ணி விட்டேன்!"

"இந்தாப்பா உன் குறும்புப் பேச்சை எல்லாம் வேறு எங்கே

(10-ம் பக்கம் பார்க்க)

தம்பி

வெள்ளை மாளிகையில்! (2)

வெள்ளை மாளிகையில் அமர்ந்து அரசோச்ச ஒரு 'கருப்பர்' அதிபரானதுபற்றி படித்
ததும் உனக்கோ எனக்கோ, ஒரு மகிழச்சி துள்ளிடுமேயன்றி அச்சம எழாதல்லவா. நிறம
எதுவாக இருந்தால் என்ன, தகுதியும் திறமையும் இருந்திடவேண்டும், அஃதன்றே முககியம,
இந்த நாட்களிலா நிறம் என்ன என்று பத்தாம்பசலிப் பேச்சுப பேசுவார்கள்! எனறு கூறு
வோம். என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்ற எண்ணம் குடையாது, மன உளைசசல் ஏற்
படாது, மருட்சி கொண்டிடமாட்டோம்.

கதைதானே!—என்று கூறிடுவர், பழமைப் பிடிப்பினர்கூட. உண்மையில் இதுபோல
எங்கே நடைபெறப்போகிறது என்ற நம்பிக்கை கலந்த தைரியத்துடன்.

டில்மன் எனும் நீக்ரோ, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரானுர் என்ற செயதி அறிவிக்கப்
பட்டதும, அமெரிக்க மக்களிடம் என்னென்ன விதமான உணர்ச்சிகள் கொந்தளித்துக
கிளம்பியிருந்திருக்கும் என்பதுபற்றி, யூகித்தறிந்துகொள்ள முடிகிறதல்லவா!

முட்டாள்! முரடன்! ஏய்! கருப்புப்பயலே! கண்மண் தெரியவில்லையா!
எச்சில்பட்ட கோப்பையை எடுத்துக்கொண்டுபோய் கழுவிவரக்கூட மறந்து
விட்டாயா, மடையா!

அவன் ஏன் இனி எச்சில் கோப்பையைக் கழுவப்போகிறுன்,
அன்பே! அவனை இனி கருப்பா என்றுகூடக் கூப்பிடக்கூடாது! டில்மன்
யார் தெரியுமா! குடிஅரசுத தலைவர் யார் தெரியுமா, கருப்புதான்! கருப்பன்
ஆள்கிறுன், வெள்ளையர் நாட்டை!! என்று பேசுவாள்.........காலம மாறி
விட்டது, கண்ணுளா! கருப்பு வெளுப்பாகிவிட்டது!!

இந்தப் பயல்களுக்கு மண்டைக்கனம் ஏறிவிட்டுத்தான் இருக்கும்,
புரிகிறது......ஆனுல் கருப்பு வெளுப்பு ஆகிவிடாது, ஆகவிடமாட்டாகள்,

வெள்ளை மாளிகைக்குள்ளேயே நுழைநதாகிவிட்டதே, இன்னும்
என்ன விபரீதம் நேரிடவேண்டும, இது போதாதா......

என்னமோ சட்டமாம்! மரபாம்! இப்படி ஒரு இழிவைச் சுமத்திவிட்
டார்கள். கருப்பு நிறத்தான் குடிஅரசுத தலைவராககூடாது என்றல்லவா
சட்டம இருககவேணடும். ஏமாளிததனமான ஒரு சடடத்தை வைத்துக்
கொணடு இப்படிப்படட ஒரு இழிவைச சுமத்திவிட்டார்கள்.

கேட்பார் எவரும் இலலையா, அமெரிக்காவிலே அறிவாளர்களே
இல்லைய ....

தம்பி, நிறவெறி பிடித்தவர்கள் இல்லங்களிலே இதுபோன்ற அளவு, அல்ல, இதைவிட மோச
மான முறையிலும அளவிலும பேச்சு எழாமலிருந்திருகக முடியுமா. மாளிகைககாரர்கள்,
வெள்ளையர்; அங்கு தோடடககாரன், வணடி ஓட்டி, சமயற்காரன, பணியாள் நீக்ரோக்கள்!
அடிமைகள் என்ற நிலை இல்லை, ஆனுல் கூலிககாரர்களாக, குற்றேவல் புரிபவர்களாக
உள்ளனர். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரவேணடும், இடப்பட்ட வேலையைச் செய்திடவேணடும்,



ஏன் என்ற கேள்வியை எழுப்பக்கூடாது. இது அவர்கள் நிலைமை! அவர்களிலே ஒருவர் அமெரிக்க அதிபர்! விந்தை என்பர் மற்றையோர், விபரீதம் என்றுதானே கூவுவர் கொதிப்படைந்த வெள்ளையர்.

'டிரம்' என்பானுடையதைபற்றிக் குறிப்பிட்டிருந்தேனே தம்பி! அந்த அடிமையை ஒரு உற்பத்திப் பண்ணைக்காரனல்லவா விலைகொடுத்து வாங்கி 'தரமான' நீக்ரோக்களை உற்பத்தி செய்து வந்தான் என்று சொன்னேன். அந்த வெள்ளை முதலாளிக்கு ஒரு வெள்ளை மாது 'தொடர்பு'—அந்த வெள்ளை மாது 'டிரம்' என்ற நீக்ரோவுக்குத் தன் உடலை ஒப்படைத்தாள், அவன் கேட்டதால் அல்ல, அவள் விரும்பியதால்! கருவுற்ருள். இது தெரிந்த வெள்ளை முதலாளி 'டிரம்' என்பானை அடித்துக் கொன்றுபோட்டான்; அவளை விரட்டிவிட்டான். அவள் வேறு ஊர் சென்று ஒரு காமக்களியாட்டக் கூடம் நடத்திவந்தாள். அங்கு வேலைக்காரனுஞன், அவள் பெற்றெடுத்த 'டிரம்சன்'

தாயிடம் மகன் பணியாள்! தாய் அறிவாள் அந்தப் பணியாள் தன் மகன் என்பதை. அவன் அறியான், எஜமானி தன் தாய் என்பதை.

மகன் என்ற பாசம், அன்பு, துளியாவது அந்த வெள்ளை மாதுக்கு இருந்ததோ? இருந்தால், அவனைக் கடுமையாக மட்டுமல்ல, கேவலமான முறையிலும் வேலை செய்யச் சொல்லி கட்டளையிட்டிருப்பாளா! மாடாக உழைத்து வந்தான்! நாய்போல நடத்தப்பட்டான்; பெற்றவளால். ஏன்? அவள் ஒரு வெள்ளைமாது; இவனோ கருநிறத்தான்; நீக்ரோ! தன் களியாட்டக் கூடத்தில் வேலை பார்த்துவந்த ஒரு நீக்ரோ கிழவியின் மகனே, 'டிரம்சன்' என்று சொல்லிவைத்தாள்.

கடைசிக்கட்டத்தில், மரணப்படுக்கையில் இருந்தபோது, உண்மையைக் கூறினளாம்; 'அம்மா!' என்று ஒரு தடவை கூப்பிடும் 'உரிமை'யை வழங்கினளாம்.

இந்த நிலையில் தள்ளப்பட்டிருந்த நீக்ரோ இனத்தவரில் ஒருவன் அமெரிக்க அதிபதி ஆகிவிட்டதால், நிறவெறியர் அதிர்ச்சி அடைந்திடாமலிருக்க முடியுமா!

டில்மன், பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கிருன்; கண்டனம்! குமுறல்! மிரட்டல்! எரிச்சல்! ஏளனம்! எச்சரிக்கை! இவைகளே மிகுதியாகக் காணப்பட்டன. படித்த டில்மன் மனம் என்னபாடு பட்டிருக்கும்! கர்த்தரே! என்னைக் கருப்பனுகவும் படைத்து, அதிபதியும ஆக்கி, இத்தனைக் கண்டனமும் என் தலையில் விழ வைக்க வேண்டுமா! என்று மனம் உருகித் துதித்திடாமல் இருந்திருக்க முடியுமா?

இனத்தின் மீது வீசப்பட்ட இழிவு பெருமளவு தன் மீது விழாதபடி, ஒரு தகுதியை உழைததுப் பெற்றுக் கொண்டு, நிம்மதயாக வாழ்ந்து வந்தான்; எதிர்பாராத முறையில, அதிபதி ஆககப்பட்டதால, வெள்ளை இனததவரின் வெறுப்பை அல்லவா பெற்றிட வேண்டியதாயிற்று. முளமுடி!

முற்போக்குக் கருத்தினைப் பரப்பிடும் ஓரிரு ஏடுகள், நிறபேதம் பார்க்கக்கூடாது, தகுதி திறமை பற்றி மட்டுமே பார்க்கவேண்டும், டில்மன் நீக்ரோவாக இருந்தால் என்ன, அமெரிக்கன், வழக்கறிஞர் துறையில் பெயர் பெற்றவன், நல்ல இயல்பினன், ஆகவே அவனுடைய ஆட்சி சிறப்பாகவே அமையும்; அனைவரும் ஆதரவு அளித்திட வேண்டும் என்று எழுதியிருந்தன. அந்தப் பாலைவன மலர் எழிலாக இருந்தது கண்டு டில்மன் மகிழ்ச்சியுற்ருன்; ஆனல் மறுகணமோ, அத்தகைய இதழ்கள், அமெரிக்க மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றவை அல்ல என்ற உண்மை உள்ளத்தைத் தாக்கிற்று. செல்வாக்குப் படைத்த பத்திரிகைகளோ? நெருப்பையும் நாராசத்தையும் வார்த்தைகளாக்கி எழுதின! உண்மை அமெரிக்கா அதிலேதான் தெரிந்தது. இதை எதிர்த்து நின்று வெற்றி பெறவேண்டும்; எதிர்ப்பதாக அறிவிக்காமலேயே!! இந்த நிலை டில்மன் பெற்ருன்.

டில்மன் குடிஅரசுத் தலைவரானது சட்டப்படி, மரபின்படி என்பதால், ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தவர்கள்கூட, எந்தச் சிறிய தவறு செய்தாலும் போதும், தன்மீது பாய்ந்து தாக்கித் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்பது புரிந்தது, நடுக்கமே பிறந்தது.

தவறுகள் செய்திடும் தலைவர்களைக் கூடத் தாங்கிக்கொள்வார்கள், ஆனல் ஒரு நீக்ரோ, 'தலைவனும்' ஆகி, அவன் தவறுகளையும் செய்தால், எப்படித் தாங்கிக்கொள்வார்கள்! எரிமலை வெடிக்கும்.

எரிமலை குமுறிற்று! வெள்ளை இனத்தின் உயர்வு மறுக்கப்பட முடியாத ஒன்று என்பதிலே அழுத்தமான நம்பிக்கையும், நிறவெறியும் கொண்ட இதழாசிரியன் ஒருவன், கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பி

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M.அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு . திண்டுக்கல்

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ளுன்; கருநிறத்தானை வெள்ளை மாளிகையிலிருந்து விரட்டி அடித்தே தீருவேன் என்று.

சட்டம், மரபு, முறை என்று எதை எதையோ கூறிக்கொண்டுதானே இந்தக் கருநிறத்தானை கொலு மண்டபத்தில் அமரச் செய்தீர்கள்; அந்தச் சட்டமே தவறு! அதிலே ஓட்டை இருக்கிறது; இந்த நியமனமே செல்லாது; சட்ட நிபுணர் கூறுகிறார்; டில்மன் குடிஅரசுத் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறார்; ஆகிவிடவில்லை; மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை; குடிஅரசுத் தலைவரை மக்கள் தேர்ந்தெடுக்கும் வரையில் டில்மன் வேலை பார்க்கலாம்; அவ்வளவுதான்; ஆகவே உடனடியாகக் குடிஅரசுத் தலைவர் தேர்தலுக்கு ஏற்பாடு செய்திடவேண்டும்; அது முடிந்ததும், இவனை வெளியேற்றவேண்டும்; என்று அவன் வாதிடலானான். அவன் அமர்த்தியிருந்த சட்ட நிபுணன் அதற்கு ஆதரவான சட்ட நுணுக்கங்களை விவரிக்கலானான். அந்த வாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்த பேரதிகாரிகள், டில்மனுக்கு அடுத்தபடியில் இருந்தவர்கள், அந்த இதழாசிரியன் கூறிய ஏற்பாட்டுக்கு இணங்க மறுத்தனர்; நிறவெறி கூடாது, நியாயம் அல்ல என்பதால் அல்ல; வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர் ஆட்சி செய்தால் என்ன என்பதால் அல்ல; வழக்காடப் போதுமான ஆதாரம் இல்லை என்பதால்!!

ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்த அந்த இதழாசிரியன், தன் பேனாமுனையினாலேயே டில்மனைக் குத்திக் கொடுமை செய்து, அவனே விரண்டோடும்படிச் செய்யத் திட்டமிட்டான். தொடர்ந்து தொல்லைகளை உருவாக்கியபடி இருந்தான். ஆனால் டில்மன் கலங்கவில்லை; வெள்ளையர் என்னைவிட எந்தவகையில் மேலானவர்; கருநிறம் எந்தவகையில் தாழ்வானது என்றெல்லாம் வாதாடவுமில்லை, வம்புகள் பேசவுமில்லை, ஒரே ஒரு உறுதியைத்தான் தெரிவித்தான், நான் சட்டப்படி குடிஅரசுத் தலைவராக அமர்ந்திருக்கிறேன்; என் கடமையைச் செய்து வருவேன்; நான் எந்த இனம். என்ன நிறம் என்பதுபற்றிய விவாதம் பொருளற்றது; நான் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவன்! இது டில்மன் கொண்ட உறுதி; கூறிய உறுதி என்றுகூடச் சொல்வதற்கில்லை.

தம்பி! நாட்டிலே ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களை தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஆக்கிவைத்துவிட்டால், பிறகு ஓர் நாள் அவர்களிலே ஒருவன், எக்காரணம் பற்றியோ 'உயர் பதவி'யில் அமர்ந்துவிட்டால், தம்மை உயர் வகுப்பு என்று எண்ணிக் கொள்பவர்கள், அவனுக்குக் கீழே வேலை செய்பவர்களாக இருப்பினும், அவன், தமக்குக் கட்டுப்பட்டு, அடங்கி ஒடுங்கி, விருப்பம் அறிந்து நடந்து கொள்ளத்தான் வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். டில்மன், குடிஅரசுத் தலைவராக இருக்கட்டும்; சுவையைப் பெறட்டும், வெள்ளை மாளிகையில் உலவட்டும்; ஆனால், எமது விருப்பம் அறிந்து நடந்துகொண்டு வரவேண்டும்; சுய சிந்தனை, தனி நடவடிக்கை, புதிய போக்கு துளி தலைதூக்கினாலும், தூக்கி வெளியே எறிந்துவிடுவோம் என்றுதான் அமைச்சர் நிலையினர் கருதிக்கொண்டனர். டில்மன் தர்பார் மண்டபத்தில் அமரட்டும், அதன் தகத்தகாயத்தைக் கண்டு களிக்கட்டும், ஆனால் தன் இச்சையைக் கட்டுப்படுத்திக்கொண்டு, நம் குறிப்பறிந்து நடந்துகொள்ள வேண்டும்...மீறினால்...!!

இந்த நாட்டில் இந்த வாரம்......

சென்னை, பிப். 5- சட்ட மன்றத்தில், கவர்னர் உரைமீதான விவாதத்தில் நிலவரியை ரத்துச் செய்யவேண்டும் என்ற கழக உறுப்பினர்களின் கோரிக்கைமீது, நிலவரி அமைப்புச் சீரமைக்கப்படும் என்று முதலமைச்சர் உறுதி கூறினார்.

புது டில்லி, பிப். 5- மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தந்ததை முன்னிட்டு நாடெங்கிலும் மாநில அரசு ஊழியர்கள் தங்கள் அதிருப்தியைக் காட்டியுள்ளனர். குறிப்பாக ஆந்திர அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவெடுத்துள்ளனர்.

சாகோர், பிப், 4- 'சொத்துரிமைக்கு, நம் அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள உத்திரவாதம், நாட்டின் சோஷலிச இலட்சியத்தை நிறைவேற்றப் பெரிதும் தடையாயிருக்கிறது என்று திட்ட மந்திரி அசோக்மேதா கூறினார்.

மதுரை, பிப். 6- மதுரையில் புதிய சர்வகலாசாலையை, தமிழக கவர்னர் திரு. சந்திரா ரெட்டி தொடக்கிவைத்தார். இது. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் கல்லூரிகளை கவனித்துக் கொள்ளும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

பம்பாய், பிப். 6- சர்க்கரைக் கட்டுப்பாட்டை நீக்க முடியாது என உணவு அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

கோவை, பிப். 6- இங்கு எண்பது புதிய காசுகளுக்கு 'முழுச் சாப்பாடு' போடவேண்டும் என்றும், நெய், அப்பளம், காய் கறிகள் அனைத்தும் பரிமாறப்படவேண்டும் என்றும், மீறினால் அனுமதி ரத்துச் செய்யப்படும் என்றும் நகர அதிகாரி அறிவித்துள்ளார். ஹோட்டல் முதலாளிகளும் ஒப்புக்கொண்டு விட்டார்களாம்.

புது டில்லி, பிப். 7- 33 பிரயாணிகள், 4 - விமான ஊழியர்களுடன் புறப்பட்டுச் சென்ற இந்தியன் ஏர் லைன்ஸ் விமானம் ஒன்று, புறப்பட்ட 16-ஆவது நிமிடத்தில் விபத்துக்காளாகியது.

சென்னை, பிப். 7- மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக் கவுன்சிலின் செயற்குழு கூடி, கவுன்சிலின் முதல் மாநாட்டை பிப். 20-ல் சென்னையில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

மைசூர், பிப். 7- டாக்டர் சி. பி. ராமசாமி (ஐயர்) தலைமையில் கூடிய சர்வ கலாசாலைகள் குழு, அண்மையில் பல்வேறு ராஜ்யங்களில் சர்வ கலாசாலைகளுக்கான சட்டத் திருத்தம் கொண்டு வந்தது சர்வ கலாசாலைகளை அவமதிப்பதாக உள்ளது என்றும், கல்வித் துறையில் அரசாங்கத் தலையீடு ஏற்பட இது வழி வகுக்குமென்றும் கவலை தெரிவித்தது.

புது டில்லி, பிப். 9- தாஷ்கண்ட் ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என்று சுப்ரீம் கோர்ட்டில், பதர்வாஹைச் சேர்ந்த அப்துல் ரகுமான் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு இம்மாதம் 13-ந் தேதி விசாரணைக்கு வருகிறது.

டில்மன் அலங்கரிக்கப்பட்ட ஒரு அடிமையாக இருந்து வரவேண்டும் என்று விரும்பினர்கள்; குறிப்பும் காட்டினர்கள்.

வெள்ளை மாளிகையிலே நுழைந்த கருநிறத்தான், தன் உண்மையான 'எஜமானர்கள்' யார் என்பதை அறிந்து அதற்கு ஏற்றபடி நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தனர்.

அவர்களின் எண்ணத்தின்படி நடந்துகொண்டால், குடி அரசுத் தலைவர் என்ற நிலையையே கேலிக்கூத்து ஆக்குவதாகிவிடும்.

அவர்களின் எண்ணத்துக்கு மாருக நடந்தால், பதவி பறிபோய்விடும்!

பதவி பறிக்கப்பட்டு விடுவதுகூட அல்ல பயமளிக்கத்தக்கது; ஒரு கருநிறத்தவனுல், அத்தனை உயரிய பதவியைச் சரியான முறையிலே நடத்திச் செல்ல முடியவில்லை!! என்ற பழி சுமத்தப்படும்; இனத்துக்கே இழிவு ஏற்படும்.

ஆக தலையாட்டியாகவும் இருக்கக்கூடாது, தன்னிச்சையாகவும் நடந்துகொள்ளக்கூடாது. அப்படியானுல் எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும்?

டில்மனுக்கு மிகவும் வேண்டியவர் கீர்த்தி வாய்ந்த ஒரு வழக்கறிஞர்; வெள்ளையர் இனம்; ஆனுல்நிறவெறி அற்றவர். அவருடன் டில்மன் பேசுகிற ஒரு சந்தர்ப்பம் வருகிறது. அப்போது இந்தப் பிரச்சினை எழுகிறது. டில்மன் அந்தப் பேச்சின்போது வெளியிட்ட ஒரு கருத்து, தம்பி! படிக்கும்போது, கண்கலங்கவைக்கிறது. நண்பருக்கு உற்சாகமூட்ட, உறுதி பெற்றிட வைக்க, அந்த வெள்ளை இன வழக்கறிஞர் கூறுகிருர், "டில்மன்! ஏன் கலக்கம்! உன் நிறம் கருப்பாக இருந்தால் என்ன!! நீ ஒரு மனிதன்!" என்று கூறுகிருர், மனித மேம்பாடு என்பது இனம, மதம், நிறம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டது என்ற அருங்கருத்தினை விளக்கிடும் முறையில். அப்போது டில்மன் வருத்தம் தோய்ந்த முறையில் "நண்பரே! என்நிறம் கருப்பு எனினும் நான் மனிதன்! அந்த உணர்வைப் பெறவேண்டும் என்கிறீரே...எப்படிமுடியும்...கருப்பர் மனிதரல்லவே..." என்று கூறுகிருர். வெள்ளை மாளிகையில் அதிபர்! அதிலே ஐயமில்லை!! ஆனுல் கருப்பர், மனிதரா? இல்லையே!!—என்று டில்மன் கூறுவது அமெரிக்காவில் அனுமதிக்கப்பட்டுக்கிடந்த மனப்போக்கை அப்படியே எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. மனதை உருகச்செய்திடும் நிலை; ஆனுல் உண்மை; அமெரிக்க நிறவெறியர், கருப்பரை மனிதர் என்று ஒப்புக்கொள்வதில்லை; அவர்கள் அடிமைகள் அல்ல என்று சட்டம் வந்தபிறகும்! அந்தச்சட்டம் வருவதற்கு முன்பு, நீதிமன்றங்கள் தீர்ப்பே அளித்திருக்கின்றன, நீக்ரோக்கள் மனிதர் அல்ல; வெறும் உடைமைகள் என்பதாக.

1781-ம் ஆண்டு, ஒரு வழக்கு நடைபெற்றது. மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஜமய்க்காவுக்கு 400-நீக்ரோக்கள் அடிமைகளாக விற்பதற்காகக் கப்பலில் கொண்டுசெல்லப்பட்டார்கள். வழியிலே பலருக்கு நோய் கண்டுவிட்டது. கப்பல் தலைவன் நோயால் பாதிக்கப்பட்ட நீக்ரோக்களில் 132-பேர்களை (உயிரோடு) கடலிலே எறிந்துவிட்டு, மற்றவர்களைக் கொண்டுபோய்ச் சேர்த்ததுடன், கடலிலே எறியப்பட்ட 132-நீக்ரோக்களின் மார்க்கட் மதிப்புக்கு ஏற்ற பணத்தை இன்ஷியூரன்ஸ் கம்பெனிதான் கட்டித் தரவேண்டும் என்று வழக்குத் தொடுத்தான். அதற்கு அவன் கூறிய வாதம், தம்பி! இப்போது நமது காதுகளுக்குக் காட்டுமிராண்டிப் பேச்சாகப்படும்; கொண்டு செல்லும் சரக்கிலே கெட்டுப்போன பகுதியை அப்புறப்படுத்திவிடுவதன்மூலமே மற்ற சரக்கைக் கெடாதபடி பாதுகாத்திட முடியும் என்ற நிலையில் சரக்கிலே ஒரு பகுதியை அப்புறப்படுத்த நேரிட்டால் அதற்கான மதிப்புள்ள பணத்தை இன்ஷியூரன்ஸ் கம்பெனி தரவேண்டும் என்ற 'விதி'யைக் காட்டினுன் வாதமாக! உயிரோடு தூக்கி எறிகிருன் நூற்றுக்கு மேற்பட்ட நீக்ரோக்களை; பதறப்பதற; ஈவு இரக்கமின்றி; வழக்குமன்றத்திலே அவன் படுகொலை செய்தான என்று அல்ல, சரக்கை இழந்ததற்கு அவனுக்கு நஷ்டஈடு தரவேண்டுமென்று வழக்கு! கேட்டனையா, தம்பி! இந்த விபரீதத்தை. கேளேன் முழுவதையும்; அட கொலைகாரா! நூறுபேர்களைப் படுகொலை செயத பாதகனு நீ! உன்னைச் சித்திரவதை அல்லவா செய்ய வேண்டும் உன்னைப்போன்ற மனிதர்கள், கடவுளின் குழந்தைகள், அவர்களைக் கடலிலே தூக்கி எறிந்த காதகனே! உன்னை வெட்டித் துண்டுகளாக்கி சமுகுக்கு விருந்தளிக்க வேண்டும் என்றெல்லாம் நீதிபதி சீறிக் கூறினுரா? அதுதான இல்லை!! கேட்கக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆயினும் என்ன செய்வது! ஆடுமாடுகள், குதிரைகள் கொண்டுசெல்லப்படும்போது நோய் வந்துவிட்டால், நோயுற்றவைகளை அப்புறப்படுத்தி மற்றவற்றைக் காத்திடுவது போன்ற முறைப்படிதான் கப்பல் தலைவன் நடந்துகொண்டான. ஆகவே அவனுக்குக கம்பெனி நஷ்டஈடு தரத்தான் வேண்டும் என்று தீர்ப்பளிததார். நீகரோ மனிதன் அல்ல! சரக்கு!! பொருள்! உடைமை!. நீதிமன்றத் தீர்ப்பு.

டில்மன், கருப்பர் மனிதர் அல்லவே என்று கூறியபோது, இந்த வழக்கு அவருடைய மனக்கண்முன் நிழலுருவாகத் தெரிந்திருக்கும்போலும்.

அரசியல் தத்துவத்துக்கே வித்து அளித்த அரிஸ்டாடில், அடிமை எனும் சொல்லுக்குப் பொருள அளிக்கும்போது, உயிருள்ள கருவி, அடிமை! என்ருர்

டில்மன் ஒரு கருவி! யாருடைய கருவி? எவருக்குப் பயன்படவேண்டிய கருவி? என்பதே பிரச்சினை என்று ஆகிவிட்டது டில்மனைச் சூழ இருந்து வந்த அரசு அவையினர், வெள்ளையரின் விருப்பத்தை அறிந்து அதற்குத் தக்கபடி பயன்பட்டுத் தீரவேண்டிய கருவி என்று உறுதியாக எண்ணிக்கொண்டனர். ஆனுல் தங்கள் இனததவர் ஒருவர், அமெரிக்கக் குடி அரசுத் தலைவரானுர் என்ற உடன், மகிழ்ச்சியால் துளளினது மட்டுமல்ல, நீக்ரோ மக்கள் மனதிலே புதியதோர் நம்பிக்கை மலர்ந்தது; இனி நமது இன்னல் தீரும், இழிவு துடைக்கப்படும்; நிலை உயரும்; வாழ்வு தழைக்கும்; வெள்ளை மாளிகையிலே நமது இனத்தவர்; இனி நம்மைக் கம்பிக்கொண்டுள்ள இருளை ஓட்டி வாழ்விலே புத்தொளி கண்டிட வழி பிறந்திடும் எனறு திடமாக நம்பினர். அவர்களின் கண்களிலே எத்தகைய ஒளி பூத்திருந்திருக்கும், முகத்திலே எத்தகைய எழில் மலர்ந்திருக்கும், பேச்சிலே என்னவிதமான இசை கலந்திருக்கும் என்பதுபற்றி எண்ணிடும்போது, எளிதாக விளங்குகிறதல்லவா, தம்பி!

நாசரின் கரத்தை நமது அப்துல்காதர், சென்னை மேயர் என்ற முறையில், குலுக்கிவரவேற்ற செய்தியை இதழில் படித்தபோது, எனக்குத் தம்பி! நானே

நாசரின் கரங்களைப் பிடித்துக் குலுக்கியது போன்ற ஒரு மகிழ்ச்சி உணர்ச்சி பிறந்தது.

நாம் மாநகராட்சி மன்றத்தில் அரசோச்ச வாய்ப்புப் பெற்றது, நடைபெறவே முடியாத அதிர்ச்சி தரத்தக்க, தலைகீழ் மாற்றமான நிகழ்ச்சியல்ல. மிகச் சாதாரணமான ஒரு அரசியல் நிகழ்ச்சி. அதற்கே நமக்கு அகமகிழ்ச்சி எத்துணை ஏற்பட்டது. டில்மன் அமெரிக்கக் குடி அரசுத் தலைவரானது என்பது சாதாரணம் அல்ல; அடிமைப்படுத்தப்பட்ட இனம், இழிவாக நடத்தப்பட்டு வரும் இனம், நீக்ரோ இனம்; அதிலே ஒருவர் எஜமானர்கள் என்ற நிலையில் உள்ள வெள்ளையர்களும் அடங்கி நடந்தாக வேண்டிய ‘அதிபர்’ நிலைபெறுவது என்றால்! மகிழ்ச்சி, கொந்தளிப்பாக அல்லவா இருக்கும்.

டில்மன் குடி அரசுத் தலைவராகி விட்டதால், ஒரே வரியில், தங்கள் இழிவுகளைப் போக்கிவிட முடியும்; என்று நம்பினர், கருநிறத்தவர்.

டில்மன் இதனை அறியாமலிருந்திருக்க முடியாது.

கதிர் குலுங்குவது காணும் உழவன் மனம் மகிழ்ச்சியால் துள்ளுவதுபோலத் தன் இனத்தவர் இருப்பார்கள் என்பதை உணர்ந்தார். புன்னகை பூத்ததா? இல்லை! பெரு மூச்சு!

அப்பா! அப்பா! எனதருமை அப்பா!
என் வாழ்த்துக்கள்! பாராட்டுதல்கள்! இங்கு
ஒரே கொண்டாட்டம்! கோலாகலம்! எல்லோ
ரும் என்னை வாழ்த்துகிறார்கள்! வந்து வந்து
பார்க்கிறார்கள், புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறார்
கள், நமது இனத்தவர் ஒரே ஆனந்தத்
தாண்டவமாடுகிறார்கள்! பல்கலைக் கழகமே
விழாக் கோலம் பூண்டிருக்கிறது!

தொலை பேசி தந்திடும் இந்தத் தேன்துளிகள் செவியிலே பாய்கின்றன டில்மன், கேட்கிறார்; இன்பமாகத்தான் இருக்கிறது; இனிப்பான பேச்சுதான்

சரி! சரி! சந்தோஷம்!
அப்படியா! ஓஹோ!
நல்லது! ஆமாம்! சரி. சரி,

இப்படிப் பதில் பேசுகிறார் டில்மன்.

மகிழ்ச்சிக் கொந்தளிப்புடன் பேசுபவன், டில்மன் மகன், கல்லூரி மாணவன்!!

இருக்குமல்லவா மகிழ்ச்சி, தந்தை, நாட்டை ஆளுந் தலைவராக அமர்ந்திருக்கிறார் என்பதால். எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய ‘வாய்ப்பா’ இது வெள்ளை மாளிகையில் அதிபராக அமருவது! அதிலும் ஒரு நீக்ரோவுக்கு அந்த வாய்ப்பு!!

மகன் பேச்சிலே களிப்பு, பெருமிதம், ததும்பிடுவது தெரிகிறது. என்மகன் மகிழ்கிறான்! பெருமிதம் கொண்டுள்ளான்! நேற்றுவரையில அவன் எத்தனையோ ஆயிரம் மாணவர்களிலே ஒருவன்; அதிலும் ஒரு நீக்ரோவின் மகன், கருப்பன்! இன்று? அவன் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரின் மகன்! பெருமிதம் கொள்ளத்தானே செய்வான். தம்பி! அந்த மாணவன் பெற்ற மகிழ்ச்சியை மாய்த்திட விருப்பம் எழவில்லை எனவே இந்த கிழமை அவன் மகிழ்ந்திருக்கும் நிலையோடு நிறுத்திக் கொள்கிறேன். மற்றவை அடுத்த கிழமை.

அண்ணன்,

அண்ணாதுரை

வெளிநாட்டில் இந்த வாரம்......

மாஸ்கோ, பிப். 5- சோவியத் விண்வெளிக் கப்பல் ‘லூனா-9’ சந்திரனின் மேல்பரப்பை எட்டி விட்டது. சந்திரமண்டலத்தின் பகுதிகளைப் புகைப் படம் மூலம் அது அனுப்புகிறது. அந்த படம்மூலம் சந்திரமண்டலத்தில் தங்கம் கிடைக்கலாமென அமெரிக்க வல்லுநர் ஒருவர் கருத்தறிவித்திருக்கிறார்.

வாஷிங்டன், பிப் 5-இந்தியாவுக்கு உதவ தன் நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் எல்லாவித உதவியும் பெற முயல்வேன் என்று ஜனாதிபதி ஜான்சன் அறிவித்துள்ளார்.

சைகோன், பிப். 7- வடவியட்நாம் மீது அமெரிக்கா விமானத் தாக்குதல் தொடங்கி ஒரு ஆண்டு முற்றுப் பெற்றதாம்; இதனை நினைவுபடுத்தும் வகையில் இன்று 14 தடவைகள் தாக்குதல் நடத்தின!

ரெடன். பிப். 9- இந்திய நாட்டின் உணவுப் பஞ்சத்தைப் போக்க ஹாலந்தில் உள்ள ரெடன் என்ற நாட்டின் குழந்தைகள் 7000 பேர் இரண்டு நாட்கள் பட்டினி கிடந்து, சேமிப்பை இந்தியாவுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறார்கள். சிலர் ஒருவாரம் புகைப்பிடிக்காமலிருந்து அந்த சேமிப்பையும் இந்தியாவுக்கு அனுப்ப இருக்கிறார்களாம்!

லண்டன், பிப். 4- வடவியட்நாமில் யு. எஸ். சின் விமானத் தாக்குதலை தான் ஆதரிக்கவில்லையென்றும், ஆனால் குண்டுவீச்சை தான் ஆதரிப்பதாகவும் பாராளுமன்ற அவையில் பிரதமர்வில்சன் அறிவித்துள்ளார்.

லண்டன், பிப். 9- இந்தியாவுக்கும், சீனாவுக்குமிடையேயுள்ள உறவுதான் இன்று உலகிலேயே மிகப் பெரியதும், மனிதனின் சாமர்த்தியத்தைக் கடுமையாகச் சிரமிக்கக் கூடியதுமான பிரச்னையாகும் என்று பிரிட்டிஷ்பிரதமர் வில்சன் காமன்ஸ் சபையில் கூறினார்.

வியன்னா, பிப். 10- வியட்நாமில் அமைதியை நிலைநாட்டுவது சம்பந்தமாக போப்பாண்டவர் எடுத்துக்கொண்ட சமாதான முயற்சியை ஆதரிக்க பெரும்பாலான நடுநிலைமை நாடுகள் மறுத்துவிட்டன.

வாடிகன்நகர், பிப். 10- இந்திய நாட்டில், பட்டினிக் கொடுமை மிகவும் கவலையளிக்கக்கூடிய அளவை எட்டி இருக்கிறது, பட்டினிச்சாவு அபாயத்தை எதிர்பார்க்கக்கூடிய அளவில் லட்சக்கணக்கானபேர் இருக்கிறார்கள். ஆகவே, பஞ்சநிலையிலுள்ள இந்தியாவுக்கு உதவ உலக மக்கள் அனைவரும் உடனே முன்வரவேண்டும்-என்று போப்பாண்டவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

யாவது வைத்துக்கொள்! வேல்கள் ஏந்திய இந்த வீராங்கனைகளுக்குத் தோள்கள் துடிதுடிக்கும், பிறகு நீ தீர்ந்தாய்!"

"என்ன நடந்தது, அதைச் சொல்லப்பா முதலிலே!"

"நீ சொன்னயே குளம், அதில் தண்ணீர் குடிக்கச் சென்றேனு? அந்தக் குளத்தின் நீரை ஆண்கள் பார்க்கக்கூடாது என்று......"

"ஆண்டவனின் கட்டளையா?"

"ஆமாம், அரசனின் கட்டளை தான்! இந்தப் பெண்கள் என்னைக் கட்டி இளவரசியின் முன்னிலையில்......"

"என்ன?"

"உண்மைதான் நண்பா, இளவரசியின் முன்பு கொண்டுபோய் நிறுத்தினர்கள்! இளவரசி கட்டளையிட்டாள், என்னை அரச மன்றத்திற்கு அழைத்துச் செல்லும்படி!" என்று சொல்லிக்கொண்டே நண்பனின் அருகே சென்ருன், இளவரசன்!

"நீ பேசாமல் ஊரினுள் வந்திரு! இவர்கள் அரச மன்றத்திற்கு இழுத்துச் செல்லட்டும்! அங்கு சென்றதும், அரசர் முகத்தை நிமிர்ந்து பார்ப்பேன்! அவர் என்னைக் கண்டதும், ஓடிவந்து சேர்த்துக் கட்டிக்கொண்டு மன்னிப்புக் கேட்பார்! பிறகு பாரேன், அந்தப்புரத்தில் காஞ்சனவும் தோழிகளும் திகைக்கப்போவதும், வெட்கத்தால் முகம் சிவக்கப்போவதும்!" என்று நண்பனின் காதில் குலசேகரன் இரகசியமாகச் சொன்னுன்.

"பூஞ்சோலை! இதைக் கேட்டால் மக்கள் சிரிப்பார்களே?"

"ஏன் சிரிக்கிருர்கள் — ஆண்டவனே இப்படிச்செய்துகாட்டி இருக்கும்போது?"

"எந்த ஆண்டவனப்பா அப்படிச் செய்திருக்கிருன்?"

"வள்ளிமீது முருகனுக்குக்காதல் பிறந்துவிட்டதல்லவா? அந்த வடிவழகியிடம், அந்த வடிவேலன் சுய உருவத்தோடு சென்று, கண்ணுக்கினிய கன்னிப் பெண்ணே! வள்ளி என்ற பெயர்கொண்ட வடிவழகியே! இதோ பார், ஆணழகன் முருகன் வந்திருக்கிறேன்! அருகில் வா மானே! இன்பம் தா தேனே! என்று சிருங்கார வார்த்தைகளைச் சிந்தினுனு? இல்லையே! கிழவனுகத் தானே அந்தக் கிளி மொழியாளை நெருங்கினுன்!" என்று சிரித்துக் கொண்டே குலசேகரன் சொல்லி விட்டு, தோழிகளோடு சென்ருன்.

அரச மனறத்திற்குச் சென்றதும், அரசர் ஓடிவந்து சேர்த்து அணைத்துக்கொள்வார் என்றுதான் குலசேகரன் எதிர்பார்த்தான்! ஆனுல் நேர்மாருக நடந்துவிட்டது! சிறையினுள் தள்ளி அடைத்தபோது, விளையாட்டு வினையாக முடிந்துவிட்டதே!' என்றெண்ணி அவன் வேதனை அடைந்தான்!

பதினேராம் பகுதி

அவள் அன்பு

அரண்மனை நந்தவனத்திலிருந்த பக்கங்களில் யானைத் தலைகளைப் போன்ற சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த ஒரு கல்லாசனத்தின்மீது, இளவரசி காஞ்சனைமாலை அமர்ந்திருந்தாள். அந்த ஆசனத்தின் அருகே புற்றரையில் உட்கார்ந்திருந்த சிலம்புத்தாய், முல்லை மொட்டுகளை நாரில் சேர்த்துக் கட்டிக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது மேலைத் திசைதனில் கதிரவன் சரிந்துகொண்டிருந்தான்! தங்கநிற வெய்யிலில் மட்டுமல்ல— தடாகத்தின் கரைமீது எடுப்பான குரலிலே பேசி, எறிட்டுப் பார்த்த அந்தக் காளையின் நினைவிலும் — காஞ்சனு மூழ்கிக்கொண்டிருந்தாள்!

"சிலம்பு! நானென்று கேட்கிறேன்—தவருக எண்ணிவிட மாட்டாயே?" என்று அவள் மெள்ளப் பேச்சை ஆரம்பித்தாள்.

"சிறுவயது முதல் ஒன்ருக நாம் பழகியும், ஏனம்மா தங்களுக்கு இந்தச் சந்தேகம்?"

"சிலம்பு! எழுந்து என் பக்கத்தில் வந்து உட்காரடி, சொல்கிறேன்!"

"சரி!"

"குளக்கரையில் நம் தோழிகள், கொடிகளால் கட்டியிழுத்து வந்து நிறுததினர்களே ஒருவனை..."

"ஆமாம்... பூஞ்சோலை!"

"அவனைப்பற்றி நீ என்ன நினைக்கிருய்?"

"எவனே வழிப்போக்கன்! கொஞ்சம் கர்வம்பிடித்தவன்! வேறுஎன்ன அவனைப்பற்றி நினைக்க இருக்கிறது?"

"அதென்னமோ சிலம்பு அவனைச்சிறையில் அடைத்ததிலிருந்து என் மனம், சரியாகவே இல்லை! அடிக்கடி அவன் பார்வை என் நினைவிற்கு வருகிறது! 'இளவரசியாரைப் பார்க்கும்போதே தெரிகிறது, இரக்கமான உள்ளம் கொண்டவர் என்று!' — அவனது இந்த வார்த்தைகள் இரவும் பகலுமாக என் காதில் ஒலித்தபடியே இருக்கின்றன!"

"அம்மா! உங்கள் பேச்சைக் கவனித்தால்......'!

"மாடு மேய்ப்பவனையும் மண் சுமப்பவனையும், கழனியில் உழுபவனையும் காட்டில் விறகு வெட்டுபவனையும் கண்டெல்லாம் இளவரசிகள் காதல் கொண்டதாகவும, அரண்மனையைவிட்டு இரவோடு இரவாக அந்தக் காதலனேடு ஓடிவிட்டதாகவும், கதைகளில் படிததிருக்கிறேன்!"

"பைத்தியக்காரி! அப்படி எந்தக் காதலும் என் கருத்தைப் பழுதாக்கிவிடவில்லை! அஞ்சாமல அவன் பேசியதைக் கண்டது முதல், அவன் மீது ஒருவித அன்பு ஏற்பட்டுவிட்டது! யாருடைய மன்னிப்பும் வேண்டாம், தவறுக்கான தண்டனையே வேண்டுமென்று எவ்வளவு உறுதியோடு சொன்னுனடி அவன்! என்னிடம் மட்டுமல்ல, விசாரித்த மந்திரியாரிடமும் அவ்விதம்தானே கூறினுன்! அவன் உண்மையிலேயே சுத்த வீரன்! அத்தகைய வீரன் ஒருவன் என்னுல் துன்பம் அனுபவிக்கிருன்— சிறையில் சிக்கிச் சிந்தை நோகிருன்—என்றெண்ணும்போது, என் உள்ளம் வேதனையடைகிறது?"

"அந்த அன்பைக் குளக்கரையில் காட்டி, அவனை அப்பொழுதே அனுப்பியிருக்க வேண்டும்! இப்பொழுது அதைப்பற்றிப் பேசி என்னம்மா பயன்? விசாரணை நடந்து, ஐந்தாண்டு சிறைத் தண்டனையும் தரப்பட்டுவிட்டது, மந்திரியாரால்! மாற்றவும் முடியுமா இனி அதை?"

"அதை மாற்ற முடியாது என்பதை நான் அறிவேன், சிலம்பு' நாம் ஏன் அவனுக்கு உதவி செய்யக் கூடாது?"

"என்ன சொல்லுகிறீர்கள் என்பது, எனக்குப் புரியவில்லையே!"

"இருள் வந்துவிட்டது, இனி இங்கு அதைப் பற்றியெல்லாம் பேசக்கூடாது! வா, அந்தப்புரத்திற்குச் செல்லலாம்! அங்கு உனக்குப் புரியும்படியாகச் சொல்கிறேன்! எழுந்திரு, சிலம்பு!"

காஞ்சனவும் சிலம்பும் அந்தப்புரத்தினுள் நுழைந்த அதே நேரத்தில், கூண்டினுள் உலவும் சிங்கத்தைப்போல, சிறைச்சாலையினுள் குலசேகரன் உலவிக்கொண்டிருந்தான். அவன் உடல் தளர்ந்து, முகம் வாடிவிட்டிருந்தது.

"காஞ்சனவை ஒருமுறை காண வேண்டுமென்ற ஆசையினுல், இப்படிக் காராக்கிரகத்தில் அடைபட்

டிருக்கவேண்டியதாயிற்றே! என்னை விசாரித்தபோது, அரசர் ஊரிலிருந்திருந்தால், நிலைமை இப்படியாகியிருக்குமா? இழுத்துச் செல்லுங்கள் இந்த நாயை சிறைக்கு!'' என்று இறுமாப்போடு சொன்ன அதே மந்திரி, 'இளவரசே வருக! வருக! என்று தலைவணங்கி வரவேற்றிருப்பான் அல்லவா? சுற்றிலுமிருந்து கேலியோடு பார்த்த அதே சேவகர்கள், பய பக்தியோடு தலைவணங்கி நிற்பார்கள் அல்லவா? ......அடிமையைப்போல நடத்தப்பட்டவன் பாண்டிய நாட்டு அரசிளங்குமரன் என்பதை அறிந்ததும், காஞ்சனாவின் கன்னங்கள் சிவந்துவிட்டிருக்குமே!

சே சே! அரசர் ஊரில் இல்லாததினால், எல்லாமே வெறும் கனவாகிவிட்டன! அரசர் எங்கு சென்றிருக்கிறார்? எவ்வளவு காலம் பிடிக்கும இங்குத் திரும்பி வர? ஒன்றுமே தெரியவில்லையே! காவலாளிகளிடம் வேந்தரைப்பற்றி ஏதாவது விசாரித்தால், அவர்கள் விலா நோகச் சிரிக்கிறார்கள்! ஐந்தாண்டு தண்டனை பெற்று சிறையில் அடைபட்டிருக்கும் ஒரு கைதி, அரசரைப் பற்றி ஆர்வத்தோடு விசாரிப்பது, காவலாளிகளுக்கு வேடிக்கையாகவும் வினோதமாகவும்தான் இருக்கும்!...எப்படியும் கைதியாக மன்னரிடம் இழுத்துச் செல்லும்படிச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தினால், 'சேலை கட்டிய பெண்ணின் மன்னிப்பைவிட, செங்கோல் ஏந்திய மன்னனின் தண்டனையே பெருமைக்குரியது என்று கருதுபவன் நான்!' என்று சொன்னதை அவள் தவறாக அல்லவா எடுத்துக்கொண்டு ஆத்திரத்தைக் கொட்டினாள்! பெண் குலத்தைப்பற்றி மிகவும் கேவலமாக எண்ணும் கீழ்மகன் என்று என்னைப்பற்றி ஒரு முடிவு, காஞ்சனா செய்துவிட்டிருப்பாளோ?......நான் மதவாதி அல்ல காஞ்சனா, மங்கையரை அடிமைகள என்று எண்ண!...இந்தப்பத்து நாட்களாக நன்னா, நீ எங்கு இருக்கிறாயோ? நான் அடைந்த தண்டனையை அறிந்து உள்ளம் புழுங்குகிறாயோ?.. .... இப்பொழுதுகூட பாண்டிய மன்னா சீவல்லபனின் மகன் நான் என்று சொல்லிவிடலாம்! நம்பினால்தான் போயிற்று! அதை நம்பாவிட்டால் இன்னும் என்னை அதிகமாகக் கேலியும் கிண்டலுமல்லவா செய்வார்கள்?... இதென்ன கோழைத்தனமான எண்ணம்? நான்தான் இளவரசன் குலசேகரன் என்றால் நம்பாமலா போய்விடுவார்கள்! நிச்சயம் நம்புவார்கள்! ஆனால் சொல்லலாமா? ஆமாம், அரசரே வந்து உண்மையைத் தெரிந்துகொள்ளும் வரைக்கும், நான் பேசாமலேயே இருக்க வேண்டும்!'

இவ்வாறெண்ணி உலவிக்கொண்டிருந்தகுலசேகரன், சிறைக் கம்பிகளைப் பிடித்தபடி வெளியில் பார்க்க ஆரம்பித்தான் எங்கும் ஓரே இருள்! அந்த இருளில் அவன் கண்களால் எதையுமே காண முடியவில்லை!

நடுநிசியும் தாண்டிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரத்திற்கு இந்த இருளின் ஆதிக்கமிருக்க முடியும்? வெள்ளி முளைக்கும் கதிரவன் உதிக்கும! அதன் பிறகு இந்த இருள் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும் அல்லவா? தனது துன்பமும் இந்த இருளைப்போன்

றதே என்று எண்ணி, மனதிற்கு அவன் ஆறுதல் சொல்ல ஆரம்பித்தான்!

சிறிது தூரத்தில் வெளிச்சம் தெரியவே, அத்திசையில் உற்றுப் பார்த்தான். கையில் தீப்பந்தத்தோடு ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள்! அவள் வேறு எப்பக்கமும் செல்லாமல், குலசேகரன் அடைபட்டிருந்த அறையை நோக்கியே வந்துகொண்டிருந்தாள். அவனது எண்ணங்கள், எங்தெந்த கற்பனை உலகத்திற்கோ ஓடித்திரும்பின!

முதற் சந்திப்பிலேயே இளவரசி அவன்மீது காதல்கொண்டுவிட்டதாகவும், தான் சிறையில் அடைக்கப்பட்டதை எண்ணி அவள் கண்ணீர் வடித்து கவலையில் ஆழ்ந்ததாகவும், பத்து நாட்களுக்குப் பிறகே தனிமையில் காதலனைச் சந்திக்கும் துணிவு அந்தத் துடியிடையாளுக்கு வந்திருப்பதாகவும் அவன் மனம் கற்பனையில் மூழ்கித் திளைத்தது!

தீப்பந்தம் அவன் அறைக்குச் சிறிது தூரத்தில வந்துகொண்டிருந்தது. வருவது உள்ளத்தைக் கவர்ந்த வடிவழகியா என்பதைத் தெரிந்துகொள்ள, அவன் உள்ளம் துடிதுடித்தது. அந்த உருவம் இன்னும் கொஞ்சம் அருகே வந்த பிறகுதான் தெரிந்தது—சந்தேகமில்லாமல் தெரிந்தது—வருவது காஞ்சனா அல்ல, தோழி சிலம்புத்தாய் என்று!

"ஆகா! என் காதற்கிளி தூது அனுப்பிவிட்டாள்!" என்று நினைத்து, அவன் மனம் கூத்தாடியது!

"என்ன பூஞ்சோலை, எப்படி இருக்கிறது சிறை?" என்று சிலம்புத்தாய் கேட்டாள, அவன் அருகே வந்ததும்.

"சிறைக்கு என்ன பழுதாவந்து விட்டது, பழையபடியே அது உறுதியாகத்தான் இருக்கிறது!"

"நான் கேட்டது — சிறை வாழ்க்கை உமக்கு எப்படியிருக்கிறது என்று!"

"எனக்கு மட்டும் என்ன குறை, சுகமாகத்தான் இருக்கிறேன்!"

"அப்படியா? ஆனால் உம் முகத்தைப் பார்த்தால் வேறுவிதமாகத் தெரிகிறதே!"

"எப்படி?"

"மிகவும் களைத்துவிட்டவரைப் போலவும், கவலையில் ஆழ்ந்திருப்பவரைப்போலவும் தெரிகிறது!"

"காட்டிலே தன் விருபபப்படிச் சுற்றித்திரியும் சிங்கத்தைக் கூண்டில் பிடித்துப் போட்டுவிட்டால், அதற்குக கவலையாக இல்லாமல் களிப்பாகவா இருக்கும்?"

"இளவரசியார் மன்னித்தேன் என்று சொன்னபோதே, சரி என்று போயவிட்டிருக்கலாம் அல்லவா? 'சேலை கட்டிய பெண்ணின மன்னிப்பைவிட, செங்கோல ஏந்திய மன்னனின் தணடனையே பெருமைக்குரியது என்று கருதுபவன நான்!" என்று வீறுப்பு பேசி, இப்படி விபரீததகில் மாட்டிக்கொண்டீா!"

"தவறு செய்ததற்குத் தண்டனை அனுபவத்துத்தானே ஆகவேண்டும்?"

"அந்தப் பழைய பல்லவி, இன்னும் உமமை விடடுப போகவில்லை போலிருக்கிறது!"

"அதெப்படி போகும், அது என் இரத்தத்தில் ஊறிவிட்ட குணமா

யிற்றே! சிறுத்தையே விரும்பினுலும் முடியுமா, அதன் உடலிலுள்ள புள்ளிகளை மாற்றிக்கொள்ள? அது போல, நானே நினைத்தாலும் என் சுபாவத்தை மாற்றிக் கொள்ள முடிவதில்லை!"

"தொல்லைகள் அதிகமானுல், உள்ளம் தன்னுல் வளைந்து கொடுக்கிறது!"

"சிறு காற்று அடித்தாலும் நாணல் குனிந்து கொடுக்கும்! புயலுக்குக்கூட அரசமரம் தலை தாழ்த்துவது கிடையாது! அரச மரத்தைப் போன்றது என் மனம்...... உடைந்தாலும் உடையுமே அன்றி, ஒரு நாளும் வளைந்து கொடுக்காது! ...அது சரி; இந்நேரத்தில் நீ எங்கு இங்கு வந்தாய்? அட, அதென்ன கையில் சிறிய மூட்டை?"

"சொல்லுகிறேன், பூஞ்சோலை! எப்படியோ உம்மீது இளவரசியாருக்குக் கருணை பிறந்திருக்கிறது!"

"நான் எதிர்பாராதது அல்ல இது!"

"எதிர்பார்த்தாயா?"

"ஆமாம்!இளவரசியாரின் கடைக்கண் பார்வையே, அப்பொழுது அதை என்னிடம் சொல்லிற்று!"

"குறும்புப் பேச்சு இருக்கட்டும் பூஞ்சோலை! தன்னுல்தானே நீர் சிறையிலிருக்க நேர்ந்தது என்று நினைத்து, இளவரசியார் வருந்துகிருர்கள்! ஆகவே..."

"நீ தூது வந்திருக்கிருய் அல்லவா?......மறுபடியும் மன்னித்ததாகச் சொல்லி அனுப்பினுர்களா? சிலம்பு, இப்படிப் பார்! யாருடைய மன்னிப்பையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை! மன்னிக்கும்படிக் கேட்கும் பணிவு என்னிடம் இருந்திருந்தால் — அல்லது மன்னித்தேனென்று சொல்வதை ஏற்றுக்கொள்ளும் கோழைத்தனம் எனனிடம் இருந்திருந்தால்......இந்நேரம் இந்தக் கொங்கு நாட்டில் நான் இருந்திருக்கமாட்டேன்! சுகமாக, இன்பமாக, என் நாட்டிற்குச் சென்றுவிட்டிருப்பேன்!"

"இளவரசியாரின் மனம் புண்ணுகும்படி இனியும் தாங்கள் நடந்து கொள்ள மாட்டீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்!"

"என்மனமும் நோகும்படிஇனியும் மன்னித்ததாகச்சொல்லவேண்டாம் என்று இளவரசியிடம் நீ கூறு!"

"மன்னித்ததாக இளவரசியார் கூறினுர் எனறு இப்பொழுது யார் உம்மிடம் சொன்னது?"

"நீ வந்திருப்பதின் நோக்கம்?"

"பூஞ்சோலை! அதை நான் சொல் இழுத்துக் கொண்டுபோய் விடுகிருய்! இளவரசியாரின் மன்னிப்பைத்தானே, !தாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்?"

"ஆமாம்!"

"உதவியை?"

"என்ன உதவியா?"

"ஆமாம் பூஞ்சோலை, தாங்கள் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு செல்ல, இளவரசியார் ஏற்பாடு செய்திருக்கிருர்கள்! இன்றிரவே இந்த நாட்டை விட்டுப் போய்விடும்படிக் கூறியனுப்பினுர்கள்? இந்தப் பொன்னையும், தமது அன்பின் அறிகுறியாகக்கொடுக்கும்படிச்சொன்னுர்கள்!" என்றுசிலம்பு கூறிக்கொண்டே, கையிலிருந்த மூட்டையை அவனிடம் நீட்டினுள்.

அதை வாங்கிக் கொள்ளாமல், அவன் ஒரு கணம் யோசித்தான். "ஆமாம், அதுதான் சரி! அப்படிச் செய்தால்தான்..." என்று மனதிற்குள்ளாகவே ஒரு முடிவு செய்து கொண்டான். உடனே கல கல வென்று சிரித்தான்.

"ஏன் இப்படிச் சிரிக்கிறீர்?"

"நான் வீரனுக இருப்பது உமது இளவரசியாருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது! ஆகவே என்னைக் கோழையாக்கத் தீர்மானித்துவிட்டிருக்கிருர்கள்! இந்தக் கொங்கு நாட்டினுள் நுழைந்த எந்த வீரனும்; திரும்பவும் தன நாட்டிற்கு வீரனுகத் திரும்ப முடியாதா?"

"இந்தா பூஞ்சோலை, அதிகநேரம் உம்மோடு நான வாதாட தயாராக இல்லை! தப்பிச் செல்ல உமக்கு விருப்பமா இல்லையா என்பதைச் சொல்லிவிடுங்கள்!'

"தப்பிச் செல்ல விருப்பமில்லை— அது கோழைகளின் செயல் — என்று சொனனுல்?"

"அதை நான் இளவரசியாரிடம் கூறிவிடுகிறேன்! பூஞ்சோலை; திரும்பவும் ஒரு முறை நன்ருக யோசித்துப்பாரும்!"

"தீர யோசித்தே நான் எதையும் பேசுவது வழக்கம்!"

"அப்படியானுல் நான் போகட்டுமா?"

"தாராளமாக! என்மீது கொண்ட அன்பிற்காக, என் நன்றியைத் தெரிவித்ததாக உன் இளவரசியிடம் கூறு!"

"சரி, நான் வருகிறேன்!"

சிலம்பு சென்றுவிட்ட பிறகு, மார்பு நிமிர்ந்து நடக்க ஆரம்பித்தான்! ஏதோ இன்ப போதையில் தன்னை மறந்தவனுக நடந்தான்!

சிறிதுநேரம் கழித்து தீப்பந்தத்தோடு இளவரசி தன்னெதிரே வந்து நிற்பதைக்கண்டதும், அவன கண்களையே அவனுல் நம்பமுடியவில்லை!

"இந்த ஏழை இருக்குமிடம் தேடி எழிலரசியான தாங்கள் வருவீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன்! ஆனுல் உண்மையிலேயே தாங்கள் வந்துவிட்டதைக் கண்டு, நான் ஆச்சரியமடைகிறேன்!" என்று அவன் சொல்லியதைக் கேட்டதும், என்ன பேசுவது என்பது புரியாமல் காஞ்சனு ஒரு நொடி ஊமையாக நின்றுவிட்டாள்!

மறுநொடி 'அம்மா! அம்மா!' என்று சிலம்புத்தாய் மேல்மூச்சு வாங்க ஓடிவந்தாள். ஒருவரையொருவர் பார்த்தபடி, தம்மை மறந்திருந்த குலசேகரனும், காஞ்சனமாலையும் அந்த அலறலைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். 'ஏன் இவள் இப்படி ஓடிவருகிருள்?' என்பது புரியாமல் இளவரசி அவளை நோக்கி வேகமாக நடந்தாள். [வளரும்]

3-ம் பக்கத் தொடர்ச்சி

பெறவேண்டியது எது எனத் தெரிந்து, பெற்றாக வேண்டும் என்று உறுதி கொண்டிட்டவர்கட்கு, அதனைப் பெறுவதிலே உள்ள இடர்ப்பாடுகள் பொருட்படுத்தத் தக்கனவாகத் தோன்ரு.

இது வெறும் காதல் விவகாரத்துக்கு மட்டும் அல்ல, நமது உள்ளத்தைக் கவர்ந்துவிடும் எதனைப் பெறுவதற்கும் இதேவிதமான திடம் இயற்கையாக ஏற்பட்டுவிடும்.

திராவிட முன்னேற்றக் கழகம், நாலே மணி நேர ரயில் பயணம், பிறகு சில நிமிடநேர மோடார் சவாரி; பிறகு தோட்ட வீடு — அங்கே பணக்காரன் பெற்றெடுத்த பாவை, என்றவிதமான ஆபத்தற்ற, அலுப்பு அற்ற அரசியலைக் கொண்டில்லை. கடினமான பயணம், காட்டுப் பாதை இன்னல் இடர்ப்பாடு இவைகளைக் காட்டுகிறது. ஆனால் இவைகளைத் தாங்கிக் கொண்ட பிறகு, உள்ளத்துக்கு ஓர் உவகை தரத்தக்க வெற்றி உண்டு என்பதைத் தெரிவிக்கிறது.

இந்த இருவிதப் பயணங்களில், இருவிதப் பாதைகளில், கடினமானதைத்தான் கழகம் காட்டுகிறது; அந்தப் பாதையைத்தான் எண்ணற்ற இளவல்கள் ஏற்றுக்கொண்டு விட்டுள்ளனர்.

பாதையிலே உள்ள கடினம், பயணத்திலே உள்ள இடர்பபாடுகள் ஆகியவற்றினைக் கூருமல், கழகம் எவரையும் அழைத்ததில்லை—முழுத்தகவலையும் கூறிவிட்டே, வரச்சம்மதமா? என்று கேட்டிருக்கிறது.

பாதையிலே நுழையுமுன்பு, பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு, ஆர அமர எண்ணிப் பார்த்து, முடிவெடுக்கச் சொல்லியிருக்கிறது கழகம்.

இன்னல் பல இருந்து தீரும் என்பதனை அறிந்து, அவைகளைத் தாங்கிக் கொண்டாகவேண்டும் என்பதனைப் புரிந்து, பயணத்திலே ஈடுபட்டு விட்டவர்கள், கழகத்தினர். எனவேதான், பயணத்திலே ஏற்படும் இன்னல் கண்டு அவர்கள் பதை பதைத்து நிற்பதில்லை, படவேண்டிய தொல்லைகளைப் பட்டாகவேண்டும், கொடுக்கவேண்டிய விலையைக் கொடுத்தாக வேண்டும் என்ற உறுதியுடன், பயணத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்தகையவர்களின் உறுதியைக் குலைக்க தேர்தல் களத்திலே நிற்கும் எம்மிடம் உள்ள 'பணபாணம்' எத்துணைக் கூர்மையானது தெரியுமா, எத்தகைய 'பெரிய புள்ளிகள்' எமது அணி வகுப்பிலே இருக்கின்றனர் தெரியுமா, நாங்கள் நினைத்தால் என்னென்ன தொல்லைகளைக் கொடுக்கமுடியும் அறிவாயா, எப்படிப்பட்ட வழக்குகளைத் தொடுக்கமுடியும் தெரியுமா என்று எதை எதையோ கதைத்துக் கொண்டுள்ளனர் — அது அவர்களின் பொழுதுபோக்காக இருந்துவிட்டுப் போகட்டும்—நாம் நமது பயணத்தை மேற்கொண்டாகவேண்டும்.

கடினமான பயணத்திற்குப் பிறகு கிடைத்திடப் போகும் வெற்றிக் கனியின் சுவை பற்றிய நினைப்பன்றி இடையே இருந்திடும் இடர்ப்பாடுகள் பற்றிய நினைப்பே எழலாகாது; இலட்சியவாதிகளுக்கு எழாது.

அந்தப் பாதையில் பலப்பல கட்டங்களைக் காண்கிறோம், தாண்டி இருக்கின்றோம்.

புதியதோர் கட்டம் 1967 தேர்தல்! இதனை மனதிற்கொண்டு கழகம் வகுத்தளித்திடும் முறைகளைச் செம்மையாக நிறைவேற்றி வைத்திட வேண்டுகிறோம்.

பிப்ரவரி 20ம் நாள் கொடி தினம்! இதிலே நாம் காட்டும் ஆர்வம், பெற்றிடும் வெற்றி, நாம் நமது பயணத்தை நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் நடாத்திச் செல்லுகிறோம் என்பதனை நாட்டினர் அறிந்திடச் செய்யவல்லது. ஆகவே இதனை எழுச்சிக்கான அழைப்பாகக் கொண்டு எங்கும் உள்ள கழகத தோழர்கள் பணியாற்றி எவரும் கண்டு வியந்து பாராட்டிடத் தக்க வெற்றியினை ஈட்டித் தந்திடவேண்டுகிறோம், கொடிபரவட்டும் கொள்கை முழங்கட்டும்!

அவசரத் தந்தி!

'லூனா-9' சந்திரமண்டலத்தை எட்டிப் படமும் பிடிக்க முயன்றுவிட்டதை, ரஷ்யாவில் இந்தியத் தூதர் கவுல், கோசிஜினை நேரில் கண்டு தம் பாராட்டைத் தெரிவித்தார்.

கோசிஜின், இந்தியத் தூதரை தன்னோடு சந்திரமண்டலத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

அதே வேளையில் அமெரிக்க வல்லுநர் ஒருவர் 'சந்திரமண்டலத்தில் தங்கம் கிடைக்கலாம்' என்ற தம் கருத்தையும் அறிவித்தார்.

இதையெல்லாம் படித்த திருவாளர் 'சரடு' நிருபர், கீழ்க்கண்ட தந்தியை இந்தியத் தூதர் கவுலுக்கு அனுப்பி வைத்தார்.

> "இந்திய நிலைமையை மனதில் கொண்டு இப்போதே கோசிஜினுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு வாருங்கள்—அதாவது சந்திரமண்டலத்தில் கிடைக்கும் தங்கத்தில் இந்தியாவுக்கும் (கடனாக) ஒரு பகுதி வேண்டுமென்று!

(கற்பனை)

முகப்பில்:

பென்பெர்க்கா

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் நாள். பிரான்சின் தலைநகரான பாரிஸ்பட்டணத்தில் 'பொலிவார்ட் செயிண்ட் ஜெர்மெயின்' என்னும் பரபரப்பு மிக்க முக்கிய வீதி; நேரம் நடுப்பகல். எறும்புக் கூட்டம்போல் சாரை சாரையாக சாலைகளில் நடமாடிக் கொண்டிருந்தமக்கள் கூட்டம்பகல் உணவுக்காக ஓட்டல்களுக்குப் போவதும்வருவதுமாகஇருக்கிறது.

நடுத்தர வயதைக் கடந்த ஒரு உருவம் ஒன்று, ஆட்சியினருக்கு எதிராக இயங்கும் இரண்டு இரகசியப் போலீசாரால் தடுத்து நிறுத்தப்படுகிறது. காத்துக்கொண்டிருந்த காரில் ஏறும்படி கட்டளை பிறக்கிறது. வேலையை முடித்துக் கொண்ட கார் மீண்டும் புறப்பட்டுச் செல்கிறது.

அன்றைய தினம் இந்த நிகழ்ச்சி அருகிலிருந்தவர்களால்கூட கவனத்துடன் பார்க்கப்படவில்லை. ஆனால் அதுதான் இப்போது அகில உலகமும் கவனித்துவரும் ஒரு அரசியல் நிகழ்ச்சியாகிவிட்டிருக்கிறது. பதட்டமே அடையாத பிரான்சின் அதிபர் டிகாலே பதைபதைக்கிறார். மொராக்கோவின் மன்னர் உசேன் பிரான்சுடன் கருத்துப்பகைமை மேற்கொள்கிறார். சர்வதேசச் சட்டமே இந்த நிகழ்ச்சியால் ஒரு புதிய குழப்பத்தைப் பெற்றுவிட்டது என்கிறார்கள். உலக அரசியலில் கற்பனைக் கதைபோல் நடந்துவிட்டிருக்கும் திடுக்கீடு மிக்க ஒரு உண்மை நாடகம் என்று விவரிக்கின்றன உலகப் பத்திரிகைகள்.

— பாரிசிலிருந்த மொராக்கோ அதிபர் திரும்ப அழைக்கப்பட்டு விட்டார். மொராக்கோவிலிருந்த பிரஞ்சுத் தூதுவர் திரும்பவும் தாய் நாட்டுக்கே புறப்பட்டுவிட்டார். இரு நாடுகளும் அரசியல் உறவுகளைத் துண்டித்துக் கொண்டுவிட்டன. பொருளாதார உறவு முறைகளை நிறுத்திக்கொள்ளுகிற அளவுக்கு இருநாடுகளுக்குமிடையே அரசியல் கசப்பு மேலிட்டுவிட்டது.

—எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நிகழ்ச்சி பாரிஸ் நகரத்தையே அலைக்கழிக்கிறது. மொராக்கோ தூதுவரகத்தின் முன்னர் அல்ஜீரியாவில் மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியிருக்கின்றனர். பிரான்சின் அதிபர் டிகாலே நேரிடையாகத் தலையிட்டு சில போலீசு அதிகாரிகளையும் விமான நிலைய அதிகாரி ஒருவரையும் வேலை நீக்க உத்தரவிட்டிருக்கிறார். மொராக்கோ மன்னர் உசேனின் பதவியே இந்த நிகழ்ச்சியால் ஆட்டம் கண்டிருக்கிறது என்றுகூட செய்திகள் வெளிவந்துள்ளன.

இவை அத்தனைக்கும்பின்னணியாக நடந்த சம்பவம் இதுதான்!

பாரிஸ் நகரத்து வீதியிலிருந்து டிகாலேவின் ஆட்சிக்கு எதிராக இயங்கும் இரகசியப் போலீசாரால் கடத்திச் செல்லப்பட்டவர் மொராக்கோ நாட்டைச் சேர்ந்த மேதி பென்பெர்க்கா என்பவராகும். இவர் ஒரு உலகம் அறிந்த இடதுசாரி சோஷலிஸ்ட். நாற்பத்தைந்து வயதானவர். ஆரம்ப நாளில் ஒரு கணித ஆசிரியராகத் தொழில் புரிந்தவர். பின்னர் இப்போது மொராக்கோவின் மன்னரான உசேன் சிறு மாணவராக இருந்த போது அவரது தந்தையால் வீட்டில் இளவரசருக்கு சிறப்புப் பாடம் சொல்லிக்கொடுப்பதற்காக அமர்த்தப்பட்டார். அதே கணித ஆசிரியரே பின்னர் சில ஆண்டுகளில் தனது மாணவன் உசேன் மன்னரான பின்பு அவரை எதிர்த்து உருவாக்கப்பட்ட மாபெரும் கொலை சதி ஒன்றில் முக்கியப் பங்கேற்றார் என்பதற்காக நாடு கடத்தப்பட்டு அது முதல் வெளி நாடுகளிலேயே வாழ்ந்துவந்தார். ஜெனிவா, பாரிஸ், ஹவானா, கெய்ரோ, ஆகிய நகரங்கள் அவரது இருப்பிடங்கள் ஆயிற்று.

தீவிர இடதுசாரியாக மாறினார். அவரது புரட்சி சோஷலிசக் கருத்துக்கள் உலகெங்கும் அறிமுகத்தையும் ஆதரவையும் தேடித் தந்தன. சமீபத்தில் கியூபாவில் மூன்று கண்டங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு மாபெரும் அரசியல்மாநாட்டை முன்னின்று நடத்தினார். அவரது வளர்ந்து வரும் அரசியல் செல்வாக்கை உணர்ந்துகொண்டவகையில் மொராக்கோவின் மன்னர் உசேன் நாடுகடத்தும் உத்திரவைத் திரும்பப் பெற்று தாய்நாடு வருவதற்கு அனுமதி அளித்துவிட்டார் என்றுகூட ஒரு செய்தி உலவியது.

இந்த ஒரு சூழ்நிலையில்தான் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் பாரிஸ் நகரத்து வீதியிலிருந்து கடத்திச் செல்லப்பட்டார் பென்பெர்க்கா. தொடர்ந்து சில நாட்கள் அவரைப்பற்றிய செய்தி ஏதும் வெளிவரவில்லை.

மகன் வீடு திரும்பாததைக் கண்ட பெர்க்காவின் தாயார் போலீசாரிடம் புகார் செய்தார். பலனில்லை ஒரு சில நாட்கள் சென்றன.

பென்பெர்க்காவைக் காணவில்லை என்ற செய்தி வெளிவந்தது.

பின்னும் சில நாட்கள் சென்றன; அவர் கடத்திச் செல்லப்பட்டிருக்க வேண்டும் என்ற வதந்தி பரவியது. பின்னர் அதுவே உறுதியாக்கப்பட்டு மற்றொரு திடுக்கீடு தரும் செய்தியாகப் பிறந்தது.

பென்பெர்க்கா கொலை செய்யப்பட்டு விட்டார்!

இதற்குப் பின்னர்தான் இந்த படுகொலை நிகழ்ச்சியில் அரசியல் வண்ணம் கலந்திருப்பது தெரியவந்தது.

பிரெஞ்சுத் துப்பறியும் இலாகா பென்பெர்க்கா படுகொலை பற்றி ஆழ்ந்து செயலாற்றத் துவங்கியது. அவரது கொலை நிகழ்ச்சி எத்தனை ஆச்சரியத்தை அளித்ததோ அதைவிடப் பன்மடங்கு அதிர்ச்சி தரத்தக்க செய்திகள் அதன் மூலம் வெளியாயின.

கொலை நிகழ்ச்சிக்குக் காரணமே மொராக்கோவின் உள்துறை அமைச்சர் ஜெனரல் ஊஃப்கிர் என்பவர்தான் என்றும் தனக்கும் பெர்க்காவுக்கும் இருந்த பகையினால் பிரெஞ்சு அதிகாரிகள் கொலையாளிகள் ஆகியோரது துணையுடன் பாரிஸ் நகரில் இச்செய்கையை வெற்றியுடன் செய்து முடித்திருக்கிறார் என்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மொராக்கோ அமைச்சருக்கு உடந்தையாக அண்டெய்னி லோபஸ் என்னும் ஊர்லி விமான நிலைய பிரெஞ்சு அதிகாரி ஒருவர் இருந்திருக்கிறார் என்றும் அந்த அதிகாரிதான் 'ஜார்ஜலிஃபிகன்' என்னும் கொள்ளைக்காரனைக் கூலிக்கு அமர்த்தி பாரிசுக்கு ஒதுக்குப்புறமான ஒரு மாளிகைக்குப் பெர்க்காவைக் கடத்திச் சென்று மொராக்கோஅமைச்சரின்முன்னிலையிலேயே கொலை நடந்திருக்கிறது என்றும் நம்பத்தகுந்த செய்திகள் வெளியாகியுள்ளன.

இதை உறுதிப்படுத்தும் வகையில் மொராக்கோ அமைச்சர் அந்த தினங்களில் பாரிஸ் நகரில்தான் இருந்திருக்கிறார் என்ற செய்தி மட்டும் எந்த தரப்பினராலும் மறுக்க

முடியாமல் இருக்கிறது. அதோடு இதில் சம்மந்தப்பட்ட ஃபிகன என்ற கொலையாளிதான் இந்த நிகழ்ச்சிககுப் பயன்படுத்தப்பட்டிருக்கிருன் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவிட்டிருக்கிறது. அவன் மீது சந்தேகம் வந்து கைது செய்யப்போன பிரெஞ்சுப் போலீசார் அவனது இருப்பிடம் நெருங்கும்போது உண்மை வெளியாகிவிடும் என்ற பயத்தில் தன்னைத் தானே சுட்டுககொண்டு இறந்துவிட்டிருக்கிருன் அவன்! இது நடந்தது கடநத ஜனவரி 18-ந் தேதி!

தற்கொலை செய்துகொண்டு இறக்குமுன் இந்த கொலையாளி ஃபிகன் என்பான் போலீசாருக்கு விளையாட்டுக் காட்டிவிட்டுததான் இறந்திருக்கிருன். ஏற்கனவே பல கொலைக் குற்றங்கள் காரணமாக போலீசாரின தேடுதலுக்கு ஆளாகியும் சாமர்த்தியமாகத் தலைமறைந்து வாழ்ந்த அவன ஜனவரி 16-ந் தேதி பாரிஸ் நகரத்துப் பத்திரிகை நிருபர்களையெல்லாம் அழைத்துப் பென்பெர்க்கா கொலை நிகழ்ச்சியில் தான் மட்டுமல்லாது மொராக்கோவின் உள்துறை அமைச்சரும் பிரெஞ்சு உயர்தர அதிகாரிகளும் சம்பநதப்பட்டவர்கள் எனறும போலீசு அதிகாரிகளுக்கு இதையெல்லாம் கண்டுபிடிக்கும் துணிவு இல்லையெனறும் முடிந்தால் தன்னையே அவர்களால் பிடிக்க முடியுமா பார்க்கலாம் என்றும் சவால்விட்டிருக்கிருன். மறுநாள் பாரிஸ் பத்திரிகைகள் அனைத்தும அவனது படத்தையும் பேட்டியையும தாங்கி வெளிவந்ததைக் கண்ட போலீசார் குழப்பமும் அவமானமும் அடைநதார்கள். உண்மையில்லையே அவன் ஃபிகனுகத்தான் இருப்பான என்ற சநதேகம் அவர்களுக்கு! பினனர் ஏதோ முடிவில எப்படியெல்லாமோ கண்டுபிடித்து அவனைக் கைது செய்யப்போகும்போதுதான் அவன தன்னைத் தானே சுட்டுக்கொண்டு இறந்துவிட்டான்.

பென்பெர்க்கா கொலை நிகழ்ச்சியில் சம்மந்தப்பட்டவன் என்ற அளவில் இருநத அவனும் இறந்துவிட்டான். ஆனல் அவனது வழக்கறிஞர் எனறு தன்னைக் கூறிக்கொண்டு லெமார்சனட் எனனும் பாராளு மன்ற உறுப்பினா பிரெஞ்சு நீதிபதி முன் ஒரு வாககு மூலததைத் தந்துள்ளாா. கடந்த நவம்பா 2-ந் தேதி ஃபிகனைத தான பார்த்ததாகவும் பென்பொக்கா கடத்தப்பட்ட நிகழ்ச்சியில் அவனுககுப் பெரும்பங்கு இருந்திருக்கலாம என் நம்புவதாகவும் மொராக்கோ நாட்டிலிருநதே இந்த கொலை நிகழ்ச்சிக்காக 72000 பவுன்கள் ஊதியம் தரப்பட்டது எனறு அவன கூறியதாகவும கூறியுள்ளார். ஆபதது நேர்ந்தால் தனககுப் பாதுகாப்பு தரவேண்டும எனறு அவன் தன்னை மிரட்டியதாகவும அப்படிததான பிடிபட நேர்ந்தால் அவரையும் இநத சதி வேலையில் சம்பநதபபட்டவர் என்று நமபும்படிச் செய்துவிடுவேன் என அவன பயமுறுத்தியதாகவும் கூறியுள்ளார் அநத வழக்கறிஞர். ஆனல இதுபற்றி அவா அச்சுறுத்தலையும் மீறி போலீசுக்குத் தகவல் தெரிவித்ததாயும கூறியுளளார்.

எனினும் நிகழ்ச்சி ஏன் தடுத்து நிறுத்தப்படவில்லை என்ற கேள்வி பிறக்குமபோதுதான் பிரெஞ்சு அதிகாரிகள் சிலரை முனகூட்டியே 'சரிசெய்து' கொண்டுப் பின் கொலைத்திட்டமே உருவாகியிருக்கிறது என்று எண்ணவேணடியுள்ளது. இது போனற சந்தேகஙகளுக்கு அடிப்படை இருப்பதால்தான பிரான்சின அதிபர் டிகாலே தானே நேரடியாக பங்குகொண்டு உடன சந்தேகப்பட்ட ஓரிரு உயர்தர அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்துள்ளார். 1898-ம் ஆண்டு நடந்த 'டிரைபஸ்' கொலை நிகழ்ச்சிககுப் பினனர் நடந்துள்ள முதல் பெரும் அரசியல் ஊழல் எனறு வர்ணிக்கப்படுகிறது இந்த நிகழ்ச்சி. பிரெஞ்சுப்பிரதமர் பாமபிடு தவறுக்கு பிரெஞ்சு அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கின்றனா என்பதை காலங்கடநதேனும உணர்ந்திருக்கிருர்.

அடுதத கட்டமாக பென்பொ்கா கொலைககு மூலகாரணம் எனறு கருதப்படும மொராக்கோ உள்துறை அமைச்சர் ஜெனரல் உஃபகிா என்பாாமீது பிரெஞ்சு அரசாங்கம் 'கைது உத்தரவை அனுப்பியபோதுதான் இந்த விவகாரமே அரசியல சூடுபெற்றது. தனது அமைச்சர் செயதது அடாத செயல என்று உணாநதபோதும அவரை எதிர்தது ஒரு சொல்கூட சொல்லமுடியாத நிலையிலிருககிருர் மன்னர் உசசேன். அநத அளவு இராணுவத்தையும் போலீசையும ஆட்டிபபடைததுககொணடிருக்கும் செல்வாககு மிகுந்த அமைச்சராக இருக்கிருர் ஜெனரல் உஃப்கிர்.

எனவே தனது அமைச்சரை எந்த காரணததைககொணடும் மொராக்கோ மண்ணில் கைது செய்ய விடமாட்டேன் என்றும தன்து நாட்டு அமைச்சர் ஒருவரைக கைதுசெய்ய உத்தரவிட பிரானசுக்கு அதிகாரம் கிடையாது எனறும எதிர்ப்புக்குரல் கொடுத்துள்ளார். இஙகுதான் சர்வதேசச் சட்டமும் பிரச்சனையில வந்து கலக்கிறது.

இடையில் பிரான்சில் வழக்கும் தொடர்ந்து நடக்கிறது. இரு நாடுகளுக்குமிடையே அரசியல் உறவும் கசபபு நிலையைப பெற்றுவிட்டது.

இநநிகழ்ச்சியில் பிரானஸ் செய்த தவறு ஒன்றே ஒன்றுதான்; அந்நாட்டு அதிகாரிகள் மொராக்கோ நாட்டு அரசியல்வாதி ஒருவரை மொராக்கோநாட்டு அமைச்சர் ஒருவரே பழிதீர்த்துக்கொளவதற்காகப் புரிநத கொலை நிகழச்சிககு உடந்தையாக இருந்திருக்கிருர்கள். இது ஒரு சில தனிபபட்ட மனிதர்கள் இழைதத தவறு. எனினும் அதற்கு அரசாங்கம பொறுப்பேற்றுககொணடு அவர்களைத தண்டித்திருப்பதோடு மேற்கொணடு கொலை தனது நாட்டில் நடந்துவிட்டதே எனபதறகாக நீதி மனறத்துககும் இந்த வழக்கை எடுத்துசசென்று பரிகாரம் தேடும் முயற்சியில் இறங்கியுள்ளது.

ஆனல இநத கொலை நிகழ்ச்சியில கண்டனததுக்கு உள்ளாவது மொராக்கோ நாடுதான. தீவிரக் கருத்துடைய ஒரு புரட்சித தலைவராக இருக்கிருர் என்பதற்காக பென்பொககாவை நாடுகடத்தியதோடு மட்டுமல்லாமல் அரசியல பகைமை காரணமாக அமைச்சர் ஒருவர் இதுபோன்ற அநாகரிக செயலகளையும செய்திருக்கிருர் என்பதை உலகம்அருவெறுப்புடன நோக்குகிறது. இதறகுப் பரிகாரம் தேடாமல் அந்த அமைச்சருக்குப் பாதுகாப்பு அளித்துததீரவேண்டிய அளவுக்கு இருக்கிற அந்நாட்டின உள்நாடடு நிலைமையை எண்ணும்போது வேதனை ஒருபுறமும மறுபுறம வெட்கமுமதான பிறககிறது. இதனுலதான மொராககோவின் போககை எதிர்த்து ஆஙகாங்கே எதிாப்பு ஆாப்பாட்டஙகள் நிகழ்ந்துள்ளன.

அரசியலில் தனிப்பட்ட பகைமையையும மாச்சரியஙகளையும் போககிககொளள சூழ்ச்சி, கடததலபின்னா கொலை ஆகியனதான மார்ககம எனறு உலகல எங்கோ ஒரு மூலையிலேனும நமபிககை இருநதுவருவது மனித இன வளாச்சி முழுமையையுமே பாதிக்கும நோயாகும.

—அரசியல் மாணவன்.

சித்தர் நவலோக கல்பம்

[Regd]

இது ஆஸ்துமா, ஆனைக்கால் வெண்குஷ்டம், குழிப்புண், ரணம், பெருத்த சரீரம் சிறுக்க மற்றும் பல வியாதிகளையும் தீர்க்க உதவுகிறது, இந்த

சித்தர் நவலோக கல்பம்

சர்க்கார் ரசாயன சாலையில் பரிசோதிக்கப்பட்டது. நாங்கள் சித்த சாஸ்திரப்படி பஸ்பம், செந்தூரம் சுண்ணம் மெழுகு கட்டுவகை எண்ணெய், தைலம், லேகியம், சூரணம் முதலியன தயாரிக்கிறோம். ஆகவே, தாங்கள் ஒருமுறை எங்கள் வைத்திய சாலைக்கு விஜயம் செய்யுங்கள்.

கிளை வைத்தியசாலை:

G. S. T. ரோடு 39-வது மைல்

பாலாற்றங்கரை, மாமண்டூர் வடபாதி, செங்கற்பட்டு ஜில்லா.

மேற்கண்ட கிளை வைத்தியசாலையில்:- பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளிலும்

சென்னையில்: ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளிலும்

நாமே வியாதியஸ்தர்களை கவனிக்கிறோம்.



சித்த வைத்தியர்

சாது. வி. நாராயணசாமி பிள்ளை

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

[Regd]

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு, :: திருவல்லிக்கேணி, சென்னை-5.

போன் நெ. 84786

[illegible] 86, [illegible] தெரு, வள்ளி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்